# Sancta Maria

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை வெளியீடு

"சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிப்பது" (எபே. 1:10)

பாரம்பரிய கத்தோலிக்க இதழ்

செப்டம்பர் - அக்டோபர் 2012





ஜெபமாலை மாதா திருநாள் | 2-ம் வத்திக்கான் சங்கம் | பிள்ளைகளின் புதுநன்மை

# Sancta Maria

**மலர்: 4  இதழ்: 5**

**செப்டம்பர் - அக்டோபர் 2012**

வெளியிடுவோர்: அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை

ஆசிரியர்: சங். திரேஷியன் பாபு


"கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக, முடிந்த வரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடம் உள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியம் ஆகும்." — பாப்பரசர் அர்ச். 10-ம் பத்திநாதர்





நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி :

St. Pius X Society, 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai - 627 002

Ph: 0462 - 2586201; 2572389 e-mail: sspxindia@gmail.com

22.08.2012

மரியாயின் மாசற்ற இருதய திருநாள்

அன்பார்ந்த வாசகர்களே,

அக்டோபர் 3-ம் நாளன்று, நாம் அர்ச். தெரேசம்மாளின் திருநாளைக் கொண்டாடுகிறோம். அவள், அர்ச். பிரான்சிஸ் சவேரியாருக்கு இணையாக வேதபோதக நாடுகள் அனைத்திற்கும் பாதுகாவலியாகத் திகழ்கின்றாள் என்பது நாம் அறிந்ததே! 24 வயதே நிரம்பிய அடைபட்ட ஜீவியத்தைக் கொண்ட ஒரு கார்மெல் சபைக் கன்னிகை இத்தகைய உயர்வை அடைந்ததெப்படி? இது எப்படி சாத்தியமாயிற்று?! அவளது பரிசுத்ததனத்தின் இரகசியம்தான் என்ன? அவளது அனைத்து அர்ச்சியசிஷ்டதனத்தின் மறைபொருள் என்னவாக இருக்க முடியும்? ஒருவரை அர்ச்சியசிஷ்டவளாக ஆக்கும் பொருள்தான் எது? இந்த வினாக்களுக்கான ஒரே பதில்: ***சிநேகம் - அன்பு!***

அர்ச். அருளப்பரின் நிருபத்தில் ஒரு மிகவும் அருமையான வாக்கியத்தை நாம் வாசிக்கிறோம். அது: *"ipse prior dilexit nos"* - "அவரே (சர்வேசுரன்) நம்மை முந்திச் சிநேகித்தார்" (1 அரு. 4:10). இதனை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இது உண்மையிலேயே மிகவும் முக்கியமான வாக்கியமாகும். இது சிருஷ்டிப்பு, சேசுவின் மனிதாவதாரம், அவரது கல்வாரிப்பாடுகள், மரணம், உயிர்ப்பு, நற்கருணை என அனைத்தினுடைய விளக்கமாக திகழ்கின்றது. காரணமில்லாமல் சர்வேசுரன் நம்மை சிருஷ்டிக்கவில்லை. அவருக்கு நாம் அவசியமில்லை. அவர் நமக்கு எதற்கும் கடன்பட்டவர் அல்லர். இருப்பினும் அவர் **சிநேகத்தை** முன்னிட்டே நம்மை சிருஷ்டித்தார். மனிதனை சிருஷ்டித்தப் பிறகும், அவன் அவரது இந்த தெய்வீக அன்புக்குப் பிரமாணிக்கமாயிருக்கவில்லை. பாவத்தைச் செய்ததன் மூலம் தவறினான். ஆனால் சர்வேசுரன் அவனை கைவிட்டுவிடவில்லை. அவனுக்கு இன்னும் அதிக நன்மையே செய்தார். ஆம்! "***தம்முடைய ஏக சுதனையே தந்தார்***" (அரு. 3:16). ஆனால் மனிதன் சர்வேசுரனின் அன்பை - அவரது தெய்வீக சிநேகத்தை மறுத்ததால் உலகில் முதல் பாவம் தோன்றியது. விளைவு - நாம் கடவுளின் எதிரிகளானோம். அதனால் அவர் நம்மை நித்தியத்திற்கும் தண்டித்திருக்கவேண்டும். ஆனால் சர்வேசுரன் அந்த நிலையிலும்கூட அதிகமாக நல்லதையே செய்தார். நமக்காக சிலுவையிலே மரித்து மனுக்குலத்தை மீட்டார். அதோடு "கிறீஸ்துநாதர் நமக்காகத் தம்மை சர்வேசுரனுக்கு பரிமள வாசனையுள்ள காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்து, நம்மை சிநேகித்தார்..." (எபே.5:2).

நான் மேலே கூறியதுபோல, நமது பரிசுத்த வேதத்தில் ஒவ்வொன்றும் "***Caritas - சிநேகம் - அன்பு***" என்ற ஒரு வார்த்தையையே சுற்றிச் சுழல்கின்றது. அதனைப்பற்றி இன்னும் போதுமான அளவு விளக்கிட நம்மால் இயலாது. இதைக் குறித்து ஒரு பிரெஞ்சு ஆசிரியர் மனதைத் தொட்டுவிடும் வகையில்: "நேசமே! உன்னைப்பற்றி பேசுவதென்றால், நித்தியம்கூட மிகவும் குறுகியதாகிவிடுகிறது!!"என்று உரைக்கின்றார். இப்போது, இந்த சிநேகம் நம்மிடம் விரும்புவதென்ன? பரிசுத்த சுவிசேஷத்திலேயே அதற்குரிய பதில் இருக்கிறது. உண்மையிலேயே, சிநேகமே எல்லா கற்பனைகளிலும் முதன்மையானதும், உந்நதமானதுமாயிருக்கிறது. "உன் கர்த்தராகிய சர்வேசுரனை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் முழு மனதோடும் சிநேகிப்பாயாக!" நமதாண்டவர் திருச்சபையை ஸ்தாபிக்கும்போது அவர் அர்ச். இராயப்பரிடம் மூன்று கேள்விகளைக் கேட்டார். அவை நிர்வாகத்தைப்பற்றியோ, நிதி மேலாண்மையைப்பற்றியோ அல்ல. மாறாக, இராயப்பரிடம் "நீ என்னை அதிகமாய் நேசிக்கிறாயா?" (அரு. 21:15) என்றுதான் கேட்டார்.

சர்வேசுரன் நம்மிடம் ஆசிப்பதும் என்னவென்றால், நம்மை சிநேகிக்கும் அவரை நாம் பதிலுக்கு சிநேகிக்க வேண்டும் என்பதே. இதனைப்பற்றியே அர்ச். சிலுவை அருளப்பர் "திருச்சபையின் அனைத்து பணிகளையெல்லாம் ஒன்று சேர்த்தாலும், அது பரிசுத்த சிநேகத்தின் மிகச்சிறிய கணங்களுக்கு ஈடாகாது!" என்று கூறுகிறார். சிறிய தெரேசாள், மரணத்தருவாயிலே அவளது சகோதரி செலீனிடம்: "எல்லாவற்றையும் கூறிவிட்டேன். எல்லாம் நிறைவேறிவிட்டது. அன்பு ஒன்றுதான் முக்கியம்" என்று கூறினாள். அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாள் மட்டுமல்ல, அர்ச். மார்க்கரெட் மரியம்மாள், அர்ச். ஜான் மரிய வியான்னி, அர்ச். பிரான்சிஸ் சவேரியார் போன்றவர்கள் அர்ச்சியசிஷ்டவர்களாக முடிந்ததென்றால, அதற்குக் காரணம், அவர்கள் சிநேகத்தை கொண்டிருந்தார்கள்.

தெய்வீக சிநேகத்தின் தாயான நம் தேவதாயிடம், நாமும் சர்வேசுரனை நமது முழு இருதயத்தோடும், முழு மனதோடும், நமது ஆன்மாவின் சகல சத்துவங்களோடும் நேசிக்க அவர்களது மாசற்ற இருதயத்தில் பற்றியெரிந்த அதே சிநேக அக்கினி நம்மிலும் பற்றியெரிய தூண்டும்படி மன்றாடுவோமாக!

Benedicamus Dómino

Fr. Therasian +

**சங். திரேஷியன் பாபு**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை**

# தப்பறைகளின் தொகுப்புரை

**Cathéchisme Catholique de la crise dans l' Église**

Abbé Matthias Gaudron SSPX

**திருச்சபையில் நெருக்கடியா? இல்லை என்று தங்களுடைய சிரசை மண்ணுக்குள் புதைத்து வைக்கும் பலரின் வறட்டு வாதங்களுக்கு பதிலளிக்கும் வகையிலும், குழம்பியுள்ள கத்தோலிக்கர்களுக்கு இக்குழப்பத்தின் காரணத்தை தெளிவாக விளக்கும் வகையிலும் எழுதப்பட்ட நூல்தான்: "திருச்சபையிலுள்ள நெருக்கடியைப்பற்றிய தெளிவுரை". இது கேள்வி – பதில் நடையில் உருவாக்கப்பட்ட காவியம். சுமார் 250 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 10 பாகங்களாக உள்ளது. இந்நூலின் ஆசிரியர், அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் குரு ஆவார். இந்நூலின் 3-ம் பாகமான 'இரண்டாம் வத்திக்கான் சங்கம் குறித்தான கேள்வி பகுதியின்' முதல் பாகத்தை இங்கு தமிழில் வழங்குகிறோம்.**

– ஆசிரியர்



### 1. இரண்டாம் வத்திக்கான் சங்கம் எப்போது நடைபெற்றது?

*இரண்டாம் வத்திக்கான் சங்கம் பாப்பரசர் 23-ஆம் அருளப்பரால், 1962 அக்டோபர் 11 அன்று தொடங்கப்பட்டது. அதற்கு அடுத்த வருடம் 23-ஆம் அருளப்பர் மரணமடைந்தார். ஆனால் அவருக்குப் பின்வந்த பாப்பரசர், ஆறாம் சின்னப்பர் சங்கத்தைத் தொடர்ந்து நடத்தி, 1965, டிசம்பர் 8 அன்று அதை முடிவுக்குக் கொண்டுவந்தார்.*

#### 1.1 இந்தச் சங்கம் இடைவெளி எதுவுமின்றி மூன்று வருடங்களுக்கு மேலாக நீடித்ததா?

*இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஒவ்வொன்றும் மூன்று மாதங்களுக்குக் குறைவான நான்கு அமர்வுகளை உள்ளடக்கியது ஆகும். இந்த அமர்வுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், மேற்றிராணியார்கள் தங்கள் மேற்றிராசனங்களுக்குத் திரும்பி வந்தார்கள். 23-ஆம் அருளப்பரின் பாப்புத்துவ பதவிக்காலத்தின் போது நடந்த ஒரேயொரு அமர்வாகிய முதலாம் அமர்வு (அக்டோபர் 11 முதல் டிசம்பர் 3, 1962 வரை) எந்த ஆவணத்தையும் அமல்படுத்தவில்லை; அடிப்படையில், சங்கத்திற்கான ஆயத்த ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட ஆவணங்களை அகற்றி விடுவதற்குத்தான் இந்த அமர்வு பயன்படுத்தப்பட்டது.*

#### 1.2 மற்ற சங்கங்களுக்கு மத்தியில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் எந்த இடத்தைக் கொண்டுள்ளது?

*இரண்டாம் வத்திக்கான் சங்கம் இருபத்து ஒன்றாவது பொதுச் சங்கமாகும். அதில் பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இதுவே அனைத்திலும் பெரிய பொதுச் சங்கமாகும்: இரண்டாயிரம் மேற்றிராணிமார்கள் இதில் பங்குபெற்றார்கள்.*

### 2. இரண்டாம் வத்திக்கான் சங்கம் அதற்கு முந்திய சங்கங்களில் இருந்து எப்படி வேறுபடுகிறது?

*இரண்டாம் வத்திக்கான் ஒரு "மேய்ப்புப் பணி சார்ந்த" சங்கம் மட்டுமே, அதற்கு மேற்பட்டது அல்ல என்று பிரகடனம் செய்யப்பட்டது. அது திருச்சபையின் ஜீவியத்திற்கென்று மேய்ப்புப்பணி சார்ந்த வழிமுறைகளைத் தருகிறது. அதன் அதிகாரிகள் வேத சத்தியங்களை வரையறுப்பதைத் தவிர்த்து விட்டார்கள். ஆகவே ஒரு சங்கத்திற்குரிய தவறாவரத்தை அவர்கள் தவிர்த்து விட்டார்கள். இதன் காரணமாக, அதன் ஆவணங்கள் தவறாவரம் உடையவையாக இல்லை.*

**2.1 ஒரு சங்கத்தின் வழக்கமான நோக்கங்கள் யாவை?**

*பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதர் முதலாம் வத்திக்கான் சங்கத்திற்கு அழைப்பு விடுக்கும் தமது மடலில், பொதுச் சங்கங்கள் விசேஷமாக "திருச்சபைக்கும், நாடுகளுக்கும் எல்லா வகையான பேராபத்துகளும் நேரிட்டுள்ள பெரும் குழப்ப காலங்களின் போது" கூட்டப்பட்டன என்று குறித்துக் காட்டுகிறார். கடந்த கால பொதுச் சங்கங்கள் எல்லாமே தப்பறையை வேரறுக்கும் நோக்கத்தோடு (முதல் ஏழு பொதுச் சங்கங்களில் குறிப்பிடத்தக்க முறையில் இதுவே நோக்கமாக இருந்தது), அல்லது மேலோங்கியுள்ள ஒரு தீமையைச் சரிப்படுத்தும்படி (சிமோனியம், பிரிவினை, குருநிலையினரின் சீர்கேடு, போன்றவை) கூட்டப்பட்டன. ஒன்பதாம் பத்திநாதர் ஒரு சங்கத்தின் முதன்மையான நோக்கங்களைச் சுருக்கிக் கூறுகிறார்: "விசுவாச சத்தியங்களை வரையறுப்பதில் பங்களிக்கக் கூடிய எல்லாவற்றையும் விவேகத்தோடும், ஞானத்தோடும் தீர்மானிப்பது; மறைவான, தந்திரமான, ஆனால் ஆபத்தான முறையில் பரப்பப்படும் தப்பறைகளைக் கண்டனம் செய்வது; கத்தோலிக்க வேதக் கொள்கையை ஆதரித்துப் பாதுகாத்து, தெளிவுபடுத்தி, விளக்கிக் கூறுவது; திருச்சபை சார்ந்த ஒழுங்கைப்பாதுகாத்து, மீண்டும் ஸ்தாபிப்பது; மற்றும் கவனமில்லாத மக்களின் பழக்க வழக்கங்களைப் பலப்படுத்துவது"* (June 29, 1868).

**2.2 அப்படியானால், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன், "மேய்ப்புப் பணி சார்ந்த" சங்கம் ஒன்று ஒருபோதும் இருந்ததில்லையா?**

*திருச்சபையின் எல்லாச் சங்கங்களும் மேய்ப்புப்பணி சார்ந்தவையே. ஆனாலும் வேத சத்தியங்களை வரையறுத்து, தப்பறைகளை வெளிப்படுத்தி, கத்தோலிக்க வேதக் கொள்கையைப் பாதுகாப்பதன் மூலமாகவும், ஒழுங்கு சார்ந்தவையும், நல்லொழுக்கம் சார்ந்தவையுமான ஒழுங்கீனங்களுக்கு எதிராகப் போராடுவதன் மூலமாகவுமேஅவை மேய்ப்புப் பணி சார்ந்தவையாக இருந்தன. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தொடக்கமே, விசுவாச சத்தியங்களை வரையறுக்கவும், தப்பறைகளைக் கண்டனம் செய்யவும், கத்தோலிக்க வேத சத்தியத்தைப் பாதுகாப்பான விதத்தில் கையளிக்கவும் கூட மறுத்ததன் மூலம், ஒரு புதிய வழியில் "மேய்ப்புப் பணி சார்ந்ததாக" இருக்க முயற்சி செய்வதாகத்தான் இருந்தது.*

**2.3 இரண்டாம் வத்திக்கான் சங்கம் விசுவாச சத்தியங்கள் சார்ந்த ஆவணங்களை அமல் படுத்தவில்லையா?**

*இரண்டாம் வத்திக்கான் சங்கம் பதினாறு ஆவணங்களை அமல்படுத்தியது; இவற்றில் ஒன்பது ஆணைமடல்களும், மூன்று பிரகடனங்களும், நான்கு ஆணைப் பத்திரங்களும் அடங்கும். இவற்றில், இரண்டு ஆவணங்கள், "விசுவாச சத்தியம் சார்ந்த ஆணைப் பத்திரங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. இவை (திருச்சபையின் மீதான) லூமென் ஜென்ஸியும்* (LUMEN GENTIUM) *மற்றும் (வெளிப்படுத்துதலின் மீதான) தேயி வெர்பும்* (DEI VERBUM) *ஆகியவை ஆகும். இதற்கு, இவை விசுவாச சத்தியங்களைப் பிரகடனம் செய்தன என்பதோ, அல்லது அவை தவறா வரமுடையவை என்பதோ பொருள் அல்ல, மாறாக அவை விசுவாச சத்தியம் சார்ந்த ஒரு காரியத்தை அவை ஆய்வு செய்கின்றன என்பதுதான் அதன் பொருளாகும். 2-ம் வத்திக்கான் சங்கம் தவறாவரத்தோடு எதையும் வரையறுக்க மறுத்து விட்டது; ஆறாம் சின்னப்பர், சங்கம் முடிவடைந்து சில வாரங்களுக்குப் பிறகு, 1966, ஜனவரி 12 அன்று, இதை வெளிப்படையாக அறிவித்தார்; "சங்கத்தின் மேய்ப்புப்பணி சார்ந்த தன்மையை முன்னிட்டு, அது ஓர் அசாதாரணமான முறையில், தவறாவரத்தின் குறிப்பை இயல்பாகக் கொண்டுள்ள விசுவாச சத்தியங்களை அறிக்கையிடுவதைத் தவிர்த்துக் கொண்டது."*

**2.4 இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் "மேய்ப்புப் பணி சார்ந்த தன்மை," திருச்சபையை நம் காலத்திற்கு ஏற்றபடி மாற்றியமைத்தல் என்னும் காரியத்தால் குறித்துக் காட்டப்படுகிறதா?**

*எல்லாச் சங்கங்களுமேதிருச்சபையை தங்கள் காலத்திற்கு ஏற்றபடி மாற்றியமைத்துள்ளன. ஆனாலும் தங்கள் காலத்தின் தப்பறைகளைச் சபித்து விலக்குவதன் மூலமாகவும், தங்கள் காலத்திற்குரிய ஒழுங்கு சார்ந்த அல்லது நல்லொழுக்கம் சார்ந்த மாறுதல்களை அங்கீகரிப்பதன் மூலமாகவும், தனது எதிரிகளுக்கு எதிராக திருச்சபையை ஆயுதம் தரிக்கச் செய்வதன் மூலமாகவும் மட்டுமேஅவை இதைச் செய்தன. காலத்திற்கேற்ப மாற்றியமைப்பது, திருச்சபையை உலகத்திற்கு ஏற்றபடி மாற்றுவதை அல்ல, மாறாக அதை எதிர்த்து நிற்பதைத்தான் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது உலகத்தைப் பிரியப்படுத்தும் காரியம் அல்ல, மாறாக, அதை எதிர்த்து நின்று, கடவுளைப் பிரியப்படுத்தும்படி அதன்மீது வெற்றிகொள்வது ஆகும். இதற்கு மாறாக 23-ஆம் அருளப்பரும், ஆறாம் சின்னப்பரும் நவீன மனிதனுக்கு உகந்ததாக திருச்சபையை மாற்றியமைக்கத் தேடினார்கள்.*

**2.5 23-ம் அருளப்பரும், 6-ம் சின்னப்பரும் இந்த நோக்கத்தை வார்த்தைகளில் எடுத்துரைத்தார்களா?**

*1960, பெப்ருவரி 14 அன்று 23-ஆம் அருளப்பர் இப்படி அறிக்கையிட்டார்: "கடவுளின் திருச்சபையை அதன் நிரந்தர ஜீவியம் மற்றும் சத்தியத்தின் உயிரோட்டத்தோடும், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தெய்வீகப் பணியோடு முன்னிலும் அதிகமாக ஒத்திருப்பதும், இன்றைய மற்றும் நாளைய தேவைகளுக்குத் தயாராயிருப்பதுமான ஒரு முறையில் தற்போதைய சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி மாற்றியமைக்கப்பட்ட அதன் சட்ட அமைப்போடும் உலகத்திற்கு சமர்ப்பிப்பதே சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்!"*

*எதிர்கால ஆறாம் சின்னப்பரான கர்தினால் மொந்தினி, 1962 ஏப்ரலில் இப்படி அறிவித்தார்: "அடுத்த சங்கத்தைக் கொண்டு, உலகத்தோடு ஒரு தொடர்புக்குள் பிரவேசிக்கத் திருச்சபை திட்டமிடுகிறது... அது தன் மொழியிலும், நடத்தையிலும்*

*(உலகத்தோடு) நட்புள்ளதாக... இருக்க முயல்கிறது.'' சங்கம் நடந்துகொண்டிருந்தபோது, ஆறாம் சின்னப்பர் எக்ளேசியாம் சுவாம் சுற்றுமடலில் இதை உறுதிப்படுத்தினார்: "பொது சமுதாயத்தில் இன்று நிலவுகிற தீமைகளைப்பற்றி ஒரு விசாரணை நடத்துவதோடும், அவற்றை வெளிப்படையாகத் தீர்ப்பிடுவதோடும், அவற்றிற்கு எதிராக ஒரு புனிதப் போரை நடத்துவதோடும் திருச்சபை திருப்தியடைந்து கொள்ளலாம்... ஆனாலும் திருச்சபை உலகத்தோடு ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய உறவின் வகையானது, அதிகமாக ஓர் உரையாடலின் தன்மையில் இருக்கவேண்டும் என்று நமக்குத் தோன்றுகிறது'' (எண் 78).*

**2.6 அப்படியானால் இரண்டாம் வத்திக்கான் சங்கம் முதலில் இருந்தே (உலகத்தை நோக்கிய) திறப்பையும், உரையாடலையும்தான் நோக்கமாகக் கொண்டிருந்ததா?**

*உண்மையில், இருபத்து மூன்றாம் அருளப்பரால் ஏற்படுத்தப்பட்ட ஆயத்த ஆணையத்தின் உறுப்பினர்கள், தாங்கள் ஒரு வழக்கமான சங்கத்திற்கு ஏற்பாடு செய்யப்போவதாகத்தான் எண்ணிக்கொண்டிருந்தார்கள். சங்க விவாதங்களுக்கு அடிப்படையாக உதவக் கூடிய முன்வரைவுப் பத்திரங்களைத் தயாரிக்க அவர்கள் மிகப் பெருமளவுக்கு உழைத்தார்கள். ஆனால், இதற்கிடையே, (ஜூன் 1960-ல்) 23-ஆம் அருளப்பராலேயே ஸ்தாபிக்கப்பட்ட மற்றொரு அமைப்பாகிய கிறீஸ்தவர்களின் ஒன்றிப்பிற்கான செயலகம் எதிரிடையான நோக்கங்களோடு வேலை செய்துகொண்டிருந்தது. இறுதியாக, 23-ம் அருளப்பரின் நிஜமான நோக்கம் வெற்றிபெற்றது: சங்கத்தின் தொடக்கத்தில், ஏற்கனவே ஆயத்தம் செய்யப்பட்டிருந்த சட்ட முன்வரைவுகள் மிக அதிகமாக "விசுவாசக் கொள்கை சம்பந்தப்பட்டவையாக'' இருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டு, வீசி எறியப்பட்டன. சங்கமானது கிறீஸ்தவர்களின் ஒன்றிப்பிற்கான செயலகத்தால் ஆயத்தம் செய்யப்பட்ட வழியில் செல்லத் தொடங்கியது.*

**2.7 ஒன்றிப்பிற்கான செயலகம் சங்கத்தை எப்படித் தயாரித்தது?**

*கர்தினால் பியாவின் தலைமையின் கீழ் ஒன்றிப்பிற்கான செயலகம் (Secretariat of Christian Unity) கத்தோலிக்கர் அல்லாதாரிடம், திருச்சபையிடமிருந்து அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று கேட்பதன் மூலம் சங்கத்தை ஆயத்தம் செய்தது. அவர்கள் ஆர்த்தடாக்ஸ் சபை யோடும், ப்ரொட்டஸ்டாண்டினரோடும், யூதர்களோடும், கம்யூனிஸ்ட்களோடும், சாத்தானின் இரகசிய சபையினரோடும் (Freemasons) தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். அவர்களிடம் குறைவுபடுவதும், ஆனால் அவர்கள் விரும்புவதுமான காரியங்களில் குறிப்பிட்ட சில, நிறைவேற்றப்படும் என்ற உறுதியை அவர்களுக்குத் தரும் அளவுக்குக்கூட செயலகம் சென்றது.*

**2.8 ஆர்த்தடாக்ஸ் மற்றும் கம்யூனிஸ்ட்கள் கேட்டுக் கொண்ட காரியங்கள் எவை?**

*ஆர்த்தடாக்ஸ் சபைகளின் அவதானிப்போரை சங்கத்திற்கு வரும்படி செய்வதற்காக, 23-ஆம் அருளப்பர் சங்கத்தில் கம்யூனிசம் கண்டனம் செய்யப்படாது என்று வாக்களித்தார். கர்தினால் திஸ்ஸெராந்த்தின் நண்பரும், நம்பிக்கைக்குரியவரும் ஆகிய மொன்சிஞ்ஞோர் ரோச் இதற்கு சாட்சியாக, "உடன்பாட்டிற்காக உரையாடல் நடத்துவது, சங்கத்தின்போது அது துல்லியமாக நிறைவேற்றப்படுவதை மேற்பார்வை பார்ப்பது ஆகிய இரண்டு காரியங்களுக்கும் கர்தினால் திஸ்ஸெராந்த் முறையான உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டார். அதனால்தான் யாராவது ஒரு மேற்றிராணியார் கம்யூனிசப் பிரச்சினை பற்றிப் பேச எழுந்தபோதெல்லாம், கர்தினால், சங்கத்தின் மேலதிகாரிகளின் ஆலோசகர் என்ற முறையில் தம் மேஜையினின்று, தலையிட்டார்'' என்றார்.*

**2.9 யூதர்களின் கோரிக்கைகள் என்ன?**

*ட்ரிப்யூன் யூவ் (Tribune Juive) பத்திரிகை எண் 1001-ல் (1987, டிசம்பர் 25-31), லாசேர் லாண்டோ இப்படி விவரித்தார்:*

*"1962-63 குளிர்காலத்தில் பனிமூட்டமான, கடுங்குளிரான ஒரு மாலை நேரத்தில், சமாதானத்திற்கான ஸட்ராஸ்பர்க் சமூக மையத்தில் நடந்த ஓர் அசாதாரண நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டேன். அதன் அடித்தளத்தில் யூதத் தலைவர்கள் பாப்பரசரின் தூதர் ஒருவரை இரகசியமாக வரவேற்றனர். சாபத் ஓய்வின் முடிவில், நாங்கள் சுமார் 12 பேர் வெண்ணிற உடுப்பு அணிந்திருந்த ஒரு சாமிநாதர் சபைக் குருவை வரவேற்றோம். சங்கத்தின் தொடக்கத்தில், கத்தோலிக்கத் திருச்சபையிடமிருந்து நாங்கள் எதிர்பார்ப்பது என்னவென்று எங்களிடம் கேட்கும் அலுவலை, 23-ஆம் அருளப்பரின் பெயரில், கர்தினால் பியாவிடம் இருந்து பெற்றுவந்த தந்தை யுவெஸ் கோங்கார்தான் அவர்...*

*கிட்டத்தட்ட இருபது நூற்றாண்டுகளாக கிறீஸ்தவ சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தவர்களும், தங்களைவிடத் தாழ்ந்தவர்களாகவும், எதிரிகளாகவும், கடவுட் கொலைகாரர்களாகவும் அடிக்கடி நடத்தப்பட்டவர்களுமாகிய யூதர்கள், தங்கள் முந்தைய சலுகைகளிலும், இயல்பான வாழ்விலும் தாங்கள் மீண்டும் முழுமையாக ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். தாங்கள் சகோதரர்களாகவும், கிறீஸ்தவத் திருச்சபையின் சமமேன்மையுள்ள பங்காளிகளாகவும் கருதப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.*

*வெண்ணாடை அணிந்தவரும், வேறு எந்த அடையாளமோ, ஆபரணமோ அணியாதிருந்தவருமாகிய அந்தத் தூதுவர் எங்கள் சொந்த மக்களை மீண்டும் பலப்படுத்துகிற எண்ணற்ற வேண்டுகோள்களைத் தாங்கியவராக உரோமைக்குத் திரும்பிச்*

சென்றார். கடினமான விவாதங்களுக்குப்பின்... சங்கம் எங்கள் விருப்பங்களுக்கு நீதி செய்தது. நோஸ்த்ரா ஏத்தாத்தே பிரகடனம், எண் 4, யூதர்களைப்பற்றிய திருச்சபையின் கொள்கையில் ஓர் உண்மையான புரட்சியாகும். சுவாமி கோங்காரும், இந்த ஆவணத்தை உருவாக்கிய மூவரும் இதை எனக்கு உறுதிப்படுத்தினார்கள்...

ஒரு சில வருடங்களுக்குள், பிரசங்கங்களும், ஞானோபதேசங்களும் மாற்றமடைந்தன... ஒரு குளிர்ச்சியான குளிர்கால இரவில், (யூத) ஜெப ஆலயத்தின் ஒரு இரகசிய அறையில் சுவாமி கோங்கார் எங்களைச் சந்தித்ததில் இருந்து, திருச்சபையின் விசுவாசக் கொள்கை உண்மையாகவே ஒரு முழுமையான மாற்றத்திற்கு உள்ளாகியிருந்தது.''

**2.10 புரொட்டெஸ்டாண்டினர், மற்றும் சாத்தானின் இரகசிய சபையினரின் கோரிக்கைகள் என்ன?**

1961 செப்டம்பரில், மிலனில், கர்தினால் பியா இரகசியமாக, சபைகளின் எக்குமெனிக்கல் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆகிய போதகர் ஏ. விஸ்ஸெர்ட் ஹூஃப்ட் என்பவரைச் சந்தித்தார். (இந்தச் சங்கம் புரொட்டஸ்டாண்ட் துவக்கமும், சாத்தானின் இரகசிய சபையின் மனநிலைகளும் உள்ள ஓர் அமைப்பாகும்.) மத சுதந்திரம் இந்தச் சந்திப்பின் பிரதான விவாதப் பொருள்களில் ஒன்றாக இருந்தது. பிற்பாடு, 1965 ஜூலை 22 அன்று, சங்கத்தின் கடைசி அமர்வுக்கு முந்தின நாள், அதே திருச்சபைகளின் எக்குமெனிக்கல் சங்கம், மத சுதந்திரம் தொடர்பான தன்னுடைய ஏழு அடிப்படையான அவசரக் கோரிக்கைகளை வெளியிட்டது. மனித மாண்பு (Dignitatis Humanae) ஆவணத்தின் மூலம் சங்கத்தால் இந்தக் கோரிக்கைகள் எல்லாமும் நிறைவேற்றப்பட்டன.

**2.11 இரண்டாம் வத்திக்கான் சங்கத்தால் கடைப்பிடிக்கப்பட்ட திறந்த நிலையின் அரசியலில் இருந்து என்ன முடிவுகளுக்கு நாம் வரக்கூடும்?**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் மற்ற சங்கங்களைப் போன்ற ஒரு சங்கம் அல்ல என்பது தெளிவாகிறது. அது அமல்படுத்தியவையும், உலகத்தோடு நடத்தப்பட்ட ''ஓர் உரையாடலின் கனியுமாகிய'' ஆவணங்கள் திருச்சபையின் ஆசிரியம் சார்ந்த ஆவணங்களாக (விசுவாச சத்தியங்களைத் தெளிவாகவும், அதிகாரத்தோடும் போதித்தல்) இல்லாமல், அதிகமாக இராஜதந்திர இயல்புடையவையாக, அல்லது (திருச்சபையின் நல்லதொரு வெளித் தோற்றத்தைப் போற்றி வளர்க்க நியமிக்கப்பட்ட) ''பொது உறவுகளின்'' தொடர்புகளின் தன்மையை உடையவையாகவும் இருக்கின்றன. இந்த ஆவணங்களில் எதுவும், தன்னிலேயே, தவறாவரமுள்ளதாக இல்லை.

## சிறந்த சிந்தனைகள் !

- **மானிட ஜீவியம் புகைபோல் மாறி மறைகின்றது. ஆகையால் மரணத்துக்குப் பயப்படுவதைவிட பாவத்துக்குப் பயந்து நடப்பதே உத்தம். ''பாம்புக்குப் பயந்தோடுவதுபோல பாவத்துக்குப் பயந்தோடு.'' மரணத்தருவாயில் ஒருவன் எந்த நிலைமையில் இருக்க விருப்பம் கொள்ளுகிறானோ, அந்த நிலைமையில் தன் ஜீவிய நாட்களிலேயே நடந்துகொள்ளப் பிரயத்தனப்படுகிறவன் எவ்வளவோ பாக்கியவான்.**
- **''அழிந்துபோகும் வஸ்துக்களைத் தேட அல்ல, மாறாக அழியாத நித்திய மோட்சானந்தத்திற்கு அடுத்தவைகளை நாடித் தேடவே நான் பிறந்தேன்'' என்பது அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்காவின் கோரிக்கையும் மாறாத தீர்மானமுமாம்.**
- **உடனே மனஸ்தாபப்பட்டு அகற்றிவிடாத ஒரேயொரு சாவான பாவம் சாதாரணமாய் அநேக பாவங்களுக்குக் காரணமும் வழியுமாகிறது. பாவத்தைத் தள்ளிவிடுகிறதில் எவ்வளவுக்கு ஒருவன் அசட்டையாயிருக்கிறானோ அவ்வளவுக்கு அவன் அன்றாடம் பலவீனமடைகிறான். அவனுடைய சத்துராதிகள் உலகம், பசாசு, சரீரம் அவனுக்கு விரோதமாய்த் தொடுக்கும் போரில் நாளுக்குநாள் பலப்பட்டுவிடுகின்றன.**
- **ஜெபத்தினாலும் தபத்தினாலுமே நமக்கு வரும் சோதனைகளை எளிதாக ஜெயிக்கலாம்.**
- **மன்னிப்படையாத பாவங்களினிமித்தமே ஆத்துமாக்கள் நரகக் குழியில் தள்ளப்படுகிறார்கள். எந்தப் பாவத்திற்காக மெய்யான மனஸ்தாபப்பட்டு நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணவில்லையோ அந்தப் பாவமே மன்னிப்படையாத பாவமாம். பாவமன்னிப்பு பெறாத ஆத்துமங்களாலும், நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யாத பாவிகளாலுமே நரகம் நிரம்பியிருக்கிறது.**

# வித்தியாசமான பொதுச்சங்கம்

**சங். திரேஷியன் பாபு**

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை

உலகில் உள்ள அனைத்து கத்தோலிக்க மேற்றிராணிமார்களும் பாப்பரசரின் ஆணையால் அழைக்கப்பட்டு, அவருடைய தலைமையின்கீழ் கூடி, திருச்சபை சம்பந்தப்பட்ட விஷயங்களை ஆராயவும், அதை குறித்தான சட்டங்கள் இயற்றவும் கூட்டப்பெறும் சங்கம் திருச்சபையின் பொதுச்சங்கம் என்று அழைக்கப்படும் *(Dictionnaire de Théologie Catholique)*.

ஒரு பொதுச்சங்கம் அமைவதற்கு தேவையான சில காரியங்கள்:

- ***பாப்பரசரால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.***
- ***அதன் பணிகள் பாப்பரசரால் நேரடியாக அல்லது பிரதிநிதி வழியாக முறைப்படுத்த வேண்டும்.***
- ***சங்கத்தின் செயல்பாடுகள் பாப்பரசரால் உறுதி செய்யப்பட வேண்டும்.***

இவ்வாறு திருச்சபையில் 21 பொதுச்சங்கங்கள் நடைபெற்றுள்ளன. அதில் கடைசியும், மிகப் பெரியதுமான (எண்ணிக்கை மட்டில் சுமார் 2400 மேற்றிராணிமார் கலந்து கொண்டனர்) அச்சங்கத்தைபற்றிய புகழ் இன்னும் பாடி முடியவில்லை. அதற்குள் திருச்சபை காலியாகி விட்டது. குருமடங்களில் புகுவோரின் எண்ணிக்கை குறைந்து விட்டது. குருக்கள், கன்னியர்கள் போக்கில் பல மாற்றங்கள் வந்து விட்டன. இது எல்லாம் ஒருபுறம் இருக்க, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் என்ன நடந்தது? அதற்கு சரியான விளக்கம் எது? என்று ஆய்வு செய்ய ஒருவர்கூட துணியவில்லை. இத்தகைய செயல் ஏன் நடைபெறவில்லை என்று வருத்தத்துடன் கேட்கிறார் மொன்சிஞ்ஞோர் கெராடினி *(Msgr. Brunero Gheradini)*. இவர் தனது "வத்திக்கான் II-ன் நடைபெறாத ஒரு விவாதம்" *(Vatican II - a debate that has not been taken place)* என்ற நூலின் வழியாக வத்திக்கானில் மட்டுமல்ல உலகின் பல்வேறு இடங்களில் ஒரு அதிர்வு அலையை உருவாக்கியுள்ளார். இவர் சாதாரண குரு அன்று. வத்திக்கானிலுள்ள அர்ச். இராயப்பர் பேராலயத்தின் முதன்மை குரு *(Canon)*. இவர் பாப்பரசரின் லாத்தரன் பல்கலைக்கழகத்தில் திருச்சபையியல் பிரிவில் துறைத் தலைவர் *(Head of the Dept.)*. பல்வேறு கர்தினால்கள், ஆயர்கள், அறிஞர்களின் ஆசிரியரான இவருக்கு திருச்சபை



அதிகாரிகளிட ம் மிகுந்த மரியாதையும், மரியாதை கலந்த பயமும் உண்டு. இவருடைய இந்நூல் ஏற்படுத்திய அதிர்வால் பல போலி கோபுரங்கள் குலுங்க ஆரம்பித்துவிட்டன. உண்மையான ஆய்வுகள் நடைபெற தொடங்கியுள்ளன. நடைபெற்று கொண்டும் இருக்கின்றன.

இதுவரை அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை மட்டுமே கூறிவந்ததை ( இதை *Msgr. Brunero Gheradini* நன்றியோடு தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்!!) திருச்சபை அதிகாரிகள் பலரும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

மற்ற 20 சங்கங்களுக்கும், இந்த 21-ம் சங்கத்திற்கும் என்ன வேறுபாடு?

இதில் பல வேறுபாடுகளை சுட்டிக்காட்டலாம். முதலாவதும் முக்கியமானதும், பரிசுத்த தந்தை 23-ம் அருளப்பர் *(Pope John XXIII)* இச்சங்கத்தின் தொடக்கத்தில் ஆற்றிய உரையில்: "இச்சங்கம் மேய்ப்புப்பணிபற்றியது. விசுவாச சத்தியங்கள் தொடர்பானது அன்று" ( *"This council is a pastoral council and not a dogmatic council"*) என்று குறிப்பிட்டதுதான். இப்போது உள்ள ஆயிரக்கணக்கான கேள்விகளுக்கு இதில் பதில் அடங்கியுள்ளது. *Msgr. Brunero Gheradini* என்பவருடைய நூலில் இதைப் பற்றி ஆழமாகவும், தெளிவாகவும் விவரித்துள்ளார்.

***"நீங்கள் 2-ம் வத்திக்கான் சங்கத்தை முழுமையாக ஏற்பவர் இல்லை, எனவே திருச்சபைக்கு புறம்பானவர்கள்" என்று கூறுவோர் கட்டாயம் வாசிக்க வேண்டிய பாகம் இந்நூலில் உள்ளது.***

(அப்படி கூறுபவர்கள் தாங்கள் முழுமையாக 2-ம் வத்திக்கான் சங்கத்தினை ஏற்றுக்கொண்டனரா என்பது இன்னொரு கேள்வி...)- இன்னும் பல முறன்பாடுகளால்

இச்சங்கம் மற்ற சங்கத்தைவிட தனித்து நிற்கிறது. முரண்பாடான விதத்தில், இங்கே வைக்கப்பட்டுள்ள வேதசாஸ்திரக் கொள்கைகளின் ஒளியில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஆவணங்களை ஒருவன் ஆய்வு செய்யும்போது, தான் கண்டுபிடிக்கிற காரியங்களால் அவன் தொடர்ச்சியான பிரமிப்புக்கு உள்ளாகிறான்.

அவனுடைய பிரமிப்புக்கான **முதல் காரணம்**, திருச்சபையை நவீனமாக்கும் வேலையில் பங்கு கொண்ட அனைத்து கத்தோலிக்கமல்லாத பிரிவினை சபைகளின் பிரதிநிதிகளாகிய நூற்றுக்கணக்கான அவதானிப்போர் (*Observer* - கருத்தூன்றிக் கவனிப்போர்), சங்கத்தில் கூடியிருந்தது ஆகும். ஒன்பதாம் பத்திநாதர் பாப்பரசர் முதலாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்ட அழைப்பு விடுத்த போது, அவர் அனைத்து புரொட்டெஸ்டாண்ட் சபையினருக்கும், கத்தோலிக்கர் அல்லாதாருக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்தார் (*Iam vos omnes*, செப்டம்பர் 13, 1868). அதில், நம் ஆண்டவராகிய சேசுகிறீஸ்துநாதரால் பரிந்துரைக்கப்பட்ட வழியை அவர்கள் பின்பற்றி வருகிறார்களா என்று தங்களையே கேட்டுக் கொள்ளும்படி அவர் அவர்களை அழைத்தார். மேலும் அவர்கள் தங்கள் முன்னோர்கள் இருந்த கத்தோலிக்கத் திருச்சபைக்குத் திரும்பி வருமாறும், அங்கே ஜீவியத்தின் மேய்ச்சல் நிலங்களைக் கண்டடையும்படியாகவும் அவர் அவர்களுக்கு அறிவுறுத்தினார். ஆனாலும் அந்த எதிர்ப்பாளர்கள் (புரொட்டெஸ்டாண்ட்டினர்) நடக்க இருக்கும் சங்கத்தில் தங்கள் வாதங்களை சமர்ப்பிக்க முடியுமா என்று கேட்டபோது, **ஏற்கனவே கவனமாகப் பரிசோதிக்கப்பட்டு, தீர்ப்பிடப்பட்டு, கண்டனம் செய்யப்பட்ட தப்பறைகளைத் தொடர்ந்து வாதிப்பதைத் திருச்சபை அனுமதிக்காது** என்று பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதர் பதிலளித்தார் (பெர் எஃபேமெரிதெஸ் ஆச்சிப்திமும், செப்டம்பர் 4, 1869). அதன் பிறகு 1869 அக்டோபர் 30 தேதியிட்ட பாப்புவின் மற்றொரு மடலில், சங்கத்திற்கு வெளியே, கத்தோலிக்க வேதசாஸ்திரிகளின் ஓர் ஆணையத்தில், தங்கள் சிரமங்களை முன்வைப்பதற்கு புரொட்டெஸ்டாண்ட்டினருக்கும், கத்தோலிக்கருக்கும் பாப்பரசர் வாய்ப்பு வழங்கினார்.

இதற்கு மாறாக, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் அவதானிப்போர் (பதிதர்கள் மற்றும் பிரிவினையாளர்கள்) செயல்பூர்வமான முறையில், மறைமுகமாகவோ, அல்லது நேரடியாகவோ கூட, சங்கத்தின் வேலையில் பங்குபெற்றார்கள். அவர்களில் ஒருவரான ஆர். மெக்காஃபீ ப்ரௌன் என்பவர் தமது "An Observer in Rome" (உரோமையில் அவதானிப்போன்) என்ற நூலில் இந்த உண்மைக்கு சாட்சியம் தருகிறார். (ஆர். மெக்காஃபீ ப்ரௌன் சங்கத்தில் பங்குபெற்ற அவதானிப்போரில் ஒருவர்).

"சங்கக் கூட்டத்தில் நேரடியாக எங்களால் குரல் கொடுக்க முடியாத போதிலும், எங்களால் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடிந்த சங்கத் தந்தையர்கள் மற்றும் அவர்களுடைய இன்றியமையாத, பலமிக்க வலது கரங்களாகிய பெரித்தி (திருச்சபைச் சட்ட வல்லுனர்கள்) ஆகியவர்களின் வழியாக உண்மையாகவே நாங்கள் மறைமுகமாக விதத்தில் குரல் கொடுத்தோம்!"

எக்குமெனிசத்தின் மீதான சட்ட முன்வரைவின் விஷயத்தில், பதித மற்றும் பிரிவினைவாத அவதானிப்போர் தங்கள் கண்ணோட்டங்களை எழுத்து வடிவத்தில் சமர்ப்பித்தார்கள் என்றும், இவை சில மேற்றிராணிமார்களின் எழுத்துபூர்வ தலையீடுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டன என்றும் இதே மெக்காஃபீ தெரிவிக்கிறார்.

பிரமிப்பிற்கான **இரண்டாவது காரணம்:** சங்க ஆவணங்களின் அளவு. இந்த ஆவணங்கள் (ஆணைப் பத்திரங்கள், ஆணை மடல்கள், பிரகடனங்கள் மற்றும் செய்திகள்) எல்லாம் சேர்ந்து ஒன்றரை அங்குல பருமனுள்ள ஒரு தொகுப்பில் 1,012 பக்கங்களுக்குக் குறையாமல் இருந்தன. இந்தத் தொகுப்போடு டென்ஸிங்கரின் (*Denziger*) புத்தகத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். (இது பாப்பரசர்களால் எடுக்கப்பட்ட முக்கியமான முடிவுகள் அடங்கிய ஒரு புத்தகமாகும். குருமாணவர்களுக்கும், குருக்களுக்கும் இது ஒரு மிக அற்புதமான குறிப்புப் புத்தகமாக விளங்குகிறது.) எல்லா சங்கங்களையும் (பொதுச் சங்கங்கள் மட்டுமல்ல, ஸ்தல சங்கங்களும் சேர்ந்தது; இவை போக, அர்ச். இராயப்பருக்குப் பின்வந்த மூன்றாவது பாப்பரசர் முதலாம் கிளமெண்ட் தொடங்கி, டென்சிங்கரின் புத்தகம் முதல் முறையாக வெளியிடப்பட்ட 1937 வரையுள்ள பரிசுத்த ஸ்தானத்தின் அனைத்து பிரகடனங்களும் உள்ளடக்கியது) சேர்ந்த அனைத்து வரையறைகள் மற்றும் பிரகடனங்களை உள்ளடக்கிய இந்நூல் ஒரு அங்குல பருமனுள்ள ஒரு புத்தகத்தில், 700-க்கும் குறைவான பக்கங்களையே கொண்டுள்ளது.

இதன் பொருள் என்ன? வெளிப்படையாக ஒன்றுமில்லை, ஆனாலும் ஓர் உரையின் அளவுக்கும் பெரும்பாலும் அதன் அறிவுக்கு உகந்த துல்லியத் தன்மைகுறைவுபடுவதற்கும் தொடர்புள்ளது. சிந்தனையின் இந்தத் துல்லியத் தன்மைகுறைவுபடுவது, ஒருவன் தான் விரும்பியபடியெல்லாம் விளக்கம் கூற அவனை அனுமதிக்கிறது. இது தன் பங்கிற்கு, சங்க ஆவணங்களை வேதசத்தியக் குறிப்புகளின் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட முடியாதவையாக ஆக்கிவிடுகிறது. ஆனால் ஒரு வேதசாஸ்திர விவரத்தில் டென்ஸிங்கரின நூலைக் கலந்தாலோசிப்பது, ஒரு தெளிவான, துல்லியமான, அறுதியான பதிலைத் தருகிறது. இந்தத் துல்லியமும், அறுதியான தன்மையும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டன.

பிரமிப்பிற்கான **மூன்றாவது காரணம்**, சங்கத்தைத் தொடங்கி வைத்து பாப்பரசர் 23-ஆம் அருளப்பர் ஆற்றிய உரையிலுள்ள வேறொரு அறிக்கையாகும். விசுவாசக் கொள்கை என்பது ஒன்று, அதன் வார்த்தை வடிவம் என்பது வேறொன்று. அது மாற முடியும்! என்றார் அவர். ஆனால் வார்த்தை வடிவம் இன்றி ஒரு விசுவாசக் கொள்கையை ஒருவன் சமர்ப்பிக்க முடியாது என்பதால், இந்த வார்த்தை வடிவம் அந்த வேத சத்தியத்தின் பாரம்பரியத் தன்மையைப் பாதுகாக்கிறது. கத்தோலிக்கப் பாரம்பரியத்தின் மாபெரும்



வீரர்கள் ஒரேயொரு வார்த்தைக்காகக் கூட அடிக்கடி போராடியிருக்கிறார்கள் என்று திருச்சபையின் வரலாறு நமக்குக் காட்டுகிறது. இந்த அறுதியான வார்த்தை வடிவம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அது எப்போதுமே மாற்றப்பட முடியாததாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

ஆனால், பாப்பரசர் 23-ஆம் அருளப்பரால் குறித்துக் காட்டப்படுகிற வழியில் ஒருவன் செல்லும்போது, அவன் முதலாம் வத்திக்கான் சங்கத்தின் (நான்காம் அத், 31வது அமர்வு) திருத்தப்பட முடியாத தீர்மானங்களோடு முரண்படுகிற ஒரு நிலைக்கு வந்து சேர்வது எளிதாக இருக்கிறது. விசுவாச சத்தியங்கள் எந்தப் பொருளில் பாரம்பரியமாகப் பாதுகாத்து வரப்பட்டுள்ளனவோ, அதே பொருளில்தான் புரிந்து கொள்ளப்பட வேண்டும் *(eodem sensu eademque sententia)* என்று முதலாம் வத்திக்கான் சங்கத்தின் இந்தத் தீர்மானங்கள் கூறுகின்றன. பாப்பரசர் பத்தாம் பத்திநாதர், பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதரின் *Syllabus* மற்றும் தமது சுற்றுமடலான *Qui Pluribus* (1846) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, நவீனவாதத்திற்கு எதிரான தமது சுற்றுமடலில், இந்தக் கொள்கையை நினைவுகூர்கிறார். பாப்பரசர் 23-ஆம் அருளப்பரின் பிரகடனம், வேறு பல அடையாளங்களுக்கு மத்தியில், ஒரு நவீனவாத மனப்பாங்கின் அடையாளமாக இருக்கிறது; பாரம்பரியத்திலிருந்து விலகிச் செல்ல சித்தமாயிருக்கும் நிலையை இது குறித்துக் காட்டுகிறது.

***நான்காவதான*** *(ஆனால் கடைசியல்லாத) பிரமிப்புக்கான* ***காரணம்:*** *(இரண்டு சால்ஸ்டன் மற்றும் லயோன் சங்கங்கள் தவிர)* முந்தின எல்லாப் பொதுச் சங்கங்களும், சரியான வேதசத்தியத்திற்கு எதிரான தப்பறைகளைக் கண்டனம் செய்வதன் மூலம், சரியான வேத சத்திய விளக்கத்தின் ஒரு கண்டிப்பான வடிவத்தை நம் பார்வைக்கு வைக்கின்றன. ஆனால் பரிந்துரைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் காலத்திற்கேற்ற மாற்றங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலான உரைகளின் ஒரு தொகுப்பாக மட்டுமேஇரண்டாம் வத்திக்கான் சங்கம் தன்னைச் சமர்ப்பிக்கிறது. இவை அனைத்துமேஅதிகத் துல்லியம் இல்லாதவை. இது இந்த ஆவணங்களை ஒருவன் தன் விருப்பப்படியெல்லாம் எந்த விதத்திலும் திரித்துக் கூற அவனை அனுமதித்துள்ளது.

**முடிவுரை:**

வாசகர்களே, நமது விசுவாசம் அரியப்பெரிய பொக்கிஷம். நமக்குள்ள யாவற்றையும் விற்று, முதலில் வாங்கவேண்டிய விலையேறப்பெற்ற நல்முத்து இது (மத். 13:46). ஆனுல் இதை வாங்கினுல் மட்டும் போதாது. மிக்க கவனத்துடனும் சிரமத்துடனும் வளர்க்க வேண்டிய பெருக்க வேண்டிய திரவியம் இது. மாறாக சுவிசேஷத்தில் ஆண்டவர் கூறியதுபோல இந்த தாலந்தை ஒளித்து (மத். 25:25) வைத்தோமானுல் ஆண்டவர் நம்மை மோட்சத்திற்கு வரவேற்க மாட்டார் என்பது நிச்சயம். ஆனுல் நாம் நமது விசுவாசத்தை பாதுகாக்க வேண்டுமானுல் ஞானேபதேசத்தில் நமக்கு போதிக்கப்பட்டுவந்த கத்தோலிக்க விசுவாசத்தை, நமது பெற்றோரால் போதிக்கப்பட்டுவந்த கத்தோலிக்க விசுவாசத்தை மட்டுமே ஏற்க வேண்டும். அதே நேரத்தில் எது தப்பறையோ அதை நிராகரிக்கவேண்டும். நமக்கு பாரம்பரியமாக போதிக்கப்பட்டு வந்த சத்தியத்துக்கு மாறான ஒன்றை திருச்சபையின் உயர் அதிகாரியிடம் இருந்து வந்தாலும்கூட நாம் அதை நிராகரிக்கவேண்டும். கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாப்பது நமது தலையாய கடமை. இதைவிட முக்கியமான கடமை நமக்கு எதுவும் இல்லை. நமது விசுவாசத்தை முழுமையாகப் பற்றி நிற்கவேண்டும் என்பதால் தான் 2-ம் வத்திக்கான் சங்கத்தின் தவறுகளை எதிர்த்து நாம் போரிடுகிறோம். **ஒரு உண்மையான வீரன் எதற்காக போரிடுகிருன்? தனக்கு முன்னால் இருப்பவர்களை வெறுப்பதால் அல்ல. மாறாக தனக்கு பின்னால் இருப்பவர்களை நேசிக்கிருன் என்பதால்தான்.** ஆகவே விழிப்பாயிருக்க வேண்டும். நமது விசுவாசத்தை நமது குழந்தைகளின் விசுவாசத்தைப் பாதுகாக்க வேண்டும். அப்படியானுல்தான் ஒரு நாள் நமது ஆண்டவரின் இனிய உதடுகளிலிருந்து, ''சபாஷ், நம்பிக்கையுள்ள நல்ல ஊழியனே'' (மத். 25:21) என்ற வார்த்தைகளை நாம் கேட்க முடியும்.

# இரு வகை வியாக்கியானங்கள்

**சங். திரேஷியன் பாபு**

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை

வருகிற அக்டோபர் 11-ம் தேதி இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆரம்பித்த 50-ஆண்டு விழாவை பகிரங்கமாக கொண்டாட வத்திக்கானில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான எல்லா ஏற்பாடுகளும் சுறுசுறுப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. இந்தப் பொன் விழா நிகழ்ச்சியை நினைவூட்டும் வகையில் இந்த ஆண்டை "விசுவாச ஆண்டாகவும்" பாப்பரசர் அறிவித்துள்ளார். ஆனால் இச்சங்கம் குறித்தான விவாதங்கள் இன்னும் முடிந்த பாடில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை ! விவாதங்கள் என்றவுடனே பாரம்பரியத்திற்கும், நவீனத்திற்கும் இடையிலான கருத்து பரிமாற்றம் என்று நினைக்கத் தோன்றும் அல்லது பாரம்பரியத்தை பற்றி நிற்பவர்கள் நவீனர்களின் நவீனத்தை எதிர்த்து நிற்பது என்றும் எண்ணத் தோன்றும். ஆனால் இங்கே குறிப்பிடப்படுகின்ற விவாதங்கள் நவீன திருச்சபைக்குள்ளே இரண்டு விதமான கருத்துக்களின் ஒன்றோடொன்றான மோதல்களின் வெளிப்பாடுகள் ஆகும். ஆம்! நவீன திருச்சபைக்குள்ளே இரண்டு குழுக்களாகப் பிரிந்து தங்களுடைய வழிமுறையே சரி என்ற வாதாடும் வேடிக்கைகள் தான் இங்கே குறிப்பிடப் படுகின்றன. இந்த 'வார்த்தை வாக்குவாதங்கள் புத்தகமாய், கட்டுரைகளாய், பேட்டிகளாய், இணைய தளங்களாய் வெளிவந்துகொண்டே இருக்கின்றன! தனக்குள் பிரிந்து போன அரசு நிலைத்திருக்க முடியுமா? அது போலத்தான் திருச்சபையின் நவீனமும்!

2-ம் வத்திக்கான் சங்கத்தின் சிறப்பே அதன் முறண்பாடுதான் !! நவீன மனிதனுக்குப் புரியும் மொழியில் பேச போவதாய் இயற்றப்பட்ட ஏடுகள் அவனுக்கு தெளிவாய் விளங்கவில்லை. வெளியிடப்பட்ட சங்க ஏடுகளோ குழப்பங்களின் மூட்டை! அவற்றை எப்படி விளக்கவேண்டும் என்பதே இன்றைக்கும் பல ஆய்வுகளின் பொருளாயிருந்து வருகிறது. வத்திக்கானிலிருந்து வரும் செய்திகளில் "இரு வகை வியாக்கியான முறை" பற்றிய தலைப்பு அடிக்கடி இடம் பெறுகிறது. அவை என்ன? அவற்றின் சாரம் என்ன? என்பது பற்றி சுருக்கமாகக் காண்போம்.

**I) முறிவு வியாக்கியான முறை** *(Hermeneutic of Rupture).*

**II) தொடர்ச்சி வியாக்கியான முறை** *(Hermeneutic of Continuity).*

**I) முறிவு வியாக்கியான முறை:**

இது சங்க ஏடுகளை எப்படி விளக்க வேண்டும் என்பதில் கையாளப்படும் முதல் முறை (இம்முறையே பல இடங்களில் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை).

இத்தாலியில், போலோஞா நகரில் வாழ்ந்த டான் ஜோசப் டோசெட்டி (Don Giussepe Dosseti) என்பவரால் தொடங்கப்பட்டது. பின்னர் அவருடைய சீடரான Alberigo Giussepe என்பவரால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டது. இவ்வியாக்கியான முறை கொண்டு அவர் எழுதிய இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வரலாறு என்ற 5 பாகங்களைக் கொண்ட மிகப் பெரிய படைப்பு, நவீனர்களின் வெற்றிக்கு மிகவும் உதவியாய் இருந்துவருகிறது. இது தன்னிலே புரட்சிகரமான எண்ணங்களைக் கொண்டது.

***2-ம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின் இருக்கும் சங்க சபைக்கும், அதற்கு முன்பாக இருந்து வந்த திருச்சபைக்கும் (?) உள்ள உறவு முறிக்கப்பட வேண்டும் என்ற கருத்துடன் தான் சங்கத்தை மொழிபெயர்க்க வேண்டும் அல்லது வியாக்கியானம் செய்யவேண்டும் என்ற முற்போக்கு எண்ணம் கொண்டது.***

இவர்களது சித்தாந்தத்தின்படி 2-ம் வத்திக்கான். சங்கம் திருச்சபையில் நடந்த "ஒரு புதிய பெந்தேகோஸ்து" ஆகும். (பாப்பு 6-ம் சின்னப்பரின் கூற்று). எனவே திருச்சபை இச்சங்கத்திற்கு முற்றிலும் இசைந்து இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பழையனவைகளைத் தள்ளி, புதியனவைகளை எழுப்பும் நவீன திறன் இது!!



இத்தகையோர்களின் (நவீனர்கள்) செயல்களால் திருச்சபையில் நடந்தேறி முடிந்த விளைவுகளில் சில:

❖ பாரம்பரியத் திருச்சபையின்படி குருக்கள் வேறு, விசுவாசிகள் வேறு. அவர்களின் அந்தஸ்தும் கடமைகளும் வெவ்வேறானவை. **ஆனால், புதிய திருச்சபையிலோ விசுவாசிகள் குருக்களின் பணிகளையும், சாதாரண விசுவாசிகளாக தங்களை மாற்றிக்கொண்ட குருக்களாக எல்லாம் கலந்த அந்தஸ்து உருவாக்கப்பட்டு வருகிறது.**

❖ திவ்விய பலிபூசை நமதாண்டவரின் கல்வாரி பலி என்ற பாரம்பரிய விசுவாசம் மாற்றப்பட்டு, **இப்போது நவீனத்தில் திருப்பலி வெறும் பகிர்ந்துகொள்ளும் இறைமக்களின் கூட்டமாய் மாறிப்போனது. குருவானவர் இக்கூட்டத்துக்கு தலைமை ஏற்று நடத்துபவராகிக் போனார் !**

❖ பாரம்பரிய திருச்சபை, ஆன்ம இரட்சண்யமே மனிதனின் இலக்கு என்கிறது; **நவீனத்தில் இந்நிலை மாறி ஆன்ம இரட்சண்யம் என்ற கருத்து மறைந்து எங்கும் மனிதம், உலகில் நீதியும், அமைதியும் தான் மனித இலக்காகி விட்டது !**

❖ பாரம்பரிய திருச்சபை நமதாண்டவர் சேசுகிறீஸ்து நாதரை மகா பரிசுத்த தமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சர்வேசுரன் என்று போதிக்கிறது; **ஆனால் 2-ம் வத்திக்கான் சங்கத்துக்குப்பின் இருக்கும் "சங்கச் சபையோர்" நமதாண்டவர் சமுதாய சீர்திருத்தவாதி, புரட்சி வீரர் என்று புது வடிவம் கொடுத்துவருகிறது.**

இவர்களைப் பொறுத்தமட்டில் திருச்சபையில் நிகழ்ந்து வரும் குழப்பங்கள் தங்கள் வெற்றியின் அடையாளம். பழையன களையப்படும் (முறிக்கப்படும்) போது ஏற்படும் வலிதான் நாம் இன்று உணர்கிற நெருக்கடி என்றும், இது முடியும் பட்சத்தில் புதிய திருச்சபை எவ்வித பழையனவைகள் இல்லாமல் காட்சியளிக்கும் (முற்றிலும் புதிய நவீன திருச்சபை !) என்பதே இவர்களுடைய கருத்து (கர்தினால் மர்தினியின் கருத்து - மிலான் முந்தைய அதிமேற்றிராசன அதிமேற்றிராணியார்). மாற்றங்கள் நிறைந்ததே வாழ்க்கை, அதை திருச்சபையிலும் காணவேண்டும் என்கின்றனர் இத்தகையோர். ஆனால் மாறாத சத்தியங்களை - திருச்சபையை எப்படி மாற்ற முடியும்?! சீர்திருத்தம் என்ற பெயரில் அவர்கள் மாற்றி அமைத்ததன் விளைவுகளே இன்று நாம் காணும் சீர்கேடுகள்.

## II) தொடர்ச்சி வியாக்கியான முறை:

2-ம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பு இருந்த திருச்சபை போதனைகளுக்கும், அதன் பின் வெளிவந்த போதனை களுக்கும் இடையில் எவ்வித பிளவோ - உடன்பாடின்மையோ இல்லை என்பது இக்கோட்பாடு.

2-ம் வத்திக்கான் சங்கம் - இரண்டாயிரம் ஆண்டு கால திருச்சபையின் ஒருமித்த வளர்ச்சி என்றும், சங்கத்திற்கு முன் இருந்த அதே உண்மைகளை மீண்டும் இக்கால மக்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் நவீனப்படுத்தி, வியாக்கியானம் செய்யவேண்டும் என்று கூறுகிறார்கள் இக்குழுவினர். எனவே தான், சங்கத்தினை கலாச்சார விழிப்புணர்வுடன்



மக்களுக்கு அளிக்க வேண்டும் என்றும், சங்கத்திற்குப் பிறகு வாழும் திருச்சபை **புது திருச்சபையல்ல - அது புதுப்பிக்கப்பட்ட ஒன்று** என்பது இவர்களது வாதம்.

பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பரின் காலத்தில் சிறுபான்மையினராய் இருந்த இக்கோட்பாட்டினர், தற்போதைய பாப்புவின் ஆதரவுடன் மீண்டும் தழைத்தோங்க தொடங்கி உள்ளனர். தான் ஆட்சிப் பீடத்தில் ஏறியவுடன் தன்னுடைய கர்தினால்களுக்கு அளித்த உரை ஒன்றில் தன்னுடைய திட்டங்களை வெளிப்படுத்தினார். (cf Discourse of Pope Benedict XVI, Dec 22, 2005, www.vatican.va). இது மிகவும் முக்கியமான உரை. தன்னுடைய எதிர்கால செயல்பாடுகள் எப்படி இருக்கும் என்று முன்னரே அறிவித்த முன்னுரை இது!!. இவ்வுரையில் வத்திக்கான் சங்கத்திற்கு ஒரேயொரு விளக்கமுறைதான் உண்டு என்றும், அது 'தொடர்ச்சிமுறை'தான் என்றும், தெளிவாகக் கூறினார். இவ்வியாக்கியான முறையில் நடைமுறைப்படுத்துவதுதான் தன்னுடைய முதற் பணியாக இருக்கும் என்று தெரிவித்திருந்தார்.

இது சரிதானா? என்று சற்ற சிந்தித்துப் பார்த்தால் - உண்மை புரியும். தவறுகள் புலப்படும். இவ்வழியும் ஆபத்தானது என்பது தெரியும். "சரியான வழியில் சிந்திக்காததால் விளையும் விளைவு நம் விசுவாசத்திற்கு எதிரானது" - இவர்கள் கூறுவது போல் **தவறுகளை சத்தியத்தின் தொடர்ச்சி என்று எப்படி கொள்ள முடியும்?** இதனை ஒரு எடுத்துக்காட்டினால் விளக்குவோம்: இதுவரை சமய ஒன்றிப்பு போக்கினை கண்டித்து வந்த (பாரம்பரிய) திருச்சபையின் போதனைகளும், அவற்றை ஆதரிக்கும் இப்போதைய (நவீன) போதனைகளும் சத்தியத்தின் தொடர்ச்சியின் மலர்ச்சியா? "கத். கிறீஸ்தவ வேதம் மட்டும் தான் இரட்சண்யப் பாதை" என்ற பாரம்பரிய விசுவாசக் கொள்கையின் தொடர்ச்சியா - எல்லா மதத்திலும் இரட்சண்யம் உண்டு என்ற புதிய படிப்பினை? இல்லை. இருக்கவே முடியாது.

இவ்வாறு கண் முன் நிகழும் முரண்பாட்டினை ஏற்றுக்கொள்ள மறுப்பது குற்றம் என்று சொல்லாமல் என்னவென்று கூறுவது? "புதுப்பிக்கப்பட்ட திருச்சபை" என்று விளக்கம் அளிக்கும் இவர்கள், இத்திருச்சபையில் நிலவும் குழப்பத்திற்கு பதில் அளிக்க மறுப்பதேன்?கசப்பான உண்மை என்னவென்றால், திருச்சபையில் நிகழும் குழுப்பங்களுக்கெல்லாம் காரணம் முறையற்ற சுதந்திரவாத நவீன கொள்கையினால் ஊறிப்போயிருக்கும் 2-ம் வத்திக்கான்

சங்கமே. சங்கத்திற்குப் பின் நடந்தவைகள் - சங்கத்திற்கு முன் கடைபிடிக்கப்பட்டு வந்தவைகளின் தொடர்ச்சி அல்ல என்பது தான் உண்மை !

**முடிவுரை**

நாம் வாழும் இந்நெருக்கடி நிலை, இவ்விரண்டில் ஒன்றை தேர்ந்தெடுப்பதின் மூலம் முற்றுப்பெறப் போவதில்லை. மாறாக தவறுகளை - பதிதங்களைக் கண்டித்து உண்மை போதகத்தை மீண்டும் போதிப்பதால் மட்டுமே தான் தீர்வு காண முடியும். **தவறாவரம் என்பது ஏதோ சில நிறுவனங்களுக்கோ, குருக்களுக்கோ அளிக்கப்பட்ட கொடையல்ல. ஆனால் கிறீஸ்துநாதரின் பிரதிநிதியான பாப்பரசருக்கு மட்டுமே, தரப்பட்ட தனி வரப்பிரசாதம்.** அதை அவர் பயன்படுத்தி சத்தியம் என்னும் தீபத்தை பிறர் காணும் வகையில் கலங்கரை விளக்கத்தில் ஏற்றும்போதுதான் தப்பறைகள் என்னும் கடலில் வழி தவறிய ஆன்மாக்கள் மீண்டும் சத்தியமெனும் கரை வந்து சேர முடியும். அந்நாள் விரைவில் நம் கண்களுக்குப் புலப்படும் என்று விசுவாசம் கொள்வோம்.

இரு வியாக்கியான முறையில் எது சிறந்தது என்ற விவாதமுறையை தள்ளிவைத்து, அழியா கத்தோலிக்க விசுவாசம் எது? அதை மட்டும் விசுவாசிகளுக்கு தரவேண்டும் என்ற முயற்சியில் இவர்கள் இயங்கவேண்டும் என்று பிரார்த்திப்போம்.

# ஓர் அர்ச்சியசிஷ்டவளின் மரணம்

**1897** செப்டம்பர் 30-ம் நாள் வியாழக்கிழமை தெரேசம்மாள் வாழ்க்கையின் கடைசிநாள். அன்று காலை கன்னி மரியம்மாள் சுரூபத்தை உற்று நோக்கி முந்தின இரவில் தான் அனுபவித்த துயரங்களைப்பற்றிக் கூறினாள். ''ஆ! எவ்வளவு உருக்கமாக மாதாவை மன்றாடினேன். ஆனால் சிறிதளவும் ஆறுதலின்றி மரண வேதனை அனுபவிக்கிறேன். இவ்வுலகம் இனிமேல் எனக்குரியதன்று. விண்ணுலகப் பேரின்ப நாட்டை எப்பொழுது அடையப்போகிறேன்?''

பல வாரங்களாக அசைய முடியாமல் கிடந்தவள் அன்று பிற்பகல் 2.30 மணிக்குப் படுக்கையிலே சற்று எழுந்து அமர்ந்து ''அன்புள்ள அன்னையே, என் பானபாத்திரம் நிரம்பி வழிகின்றது. இவ்வளவு சகிக்க என்னால் முடியுமென்று நான் நம்பவேயில்லை. ஆன்ம ஈடேற்றத்தின் மேல் நான் கொண்ட ஆவல்தான் எனக்கு இந்த வல்லமையை தந்திருக்க வேண்டும்... என் ஆண்டவரே, உமது திருவுளம் என்னவானாலும் நிறைவேறட்டும். ஆனால் என் மீது இரக்கமாயிரும். அன்புள்ள கன்னித்தாயே, எனக்குத் துணையாக வாரும்'' என்றாள். பிறகு மீண்டும் பேசினாள்: '' துயரப்பட வேண்டுமென்று எனக்குள்ள ஆவலைப்பற்றி நாள் எழுதிவைத்த அத்தனை உணர்ச்சிகளும் உண்மையானவை. **என்னை முழுவதும் அன்புக்குக் கையளித்தமைபற்றி நான் சிறதளவும் வருந்தவில்லை**'' என்றாள். இந்தக் கடைசி வாக்கியத்தைப் பன்முறை திருப்பிச் சொன்னாள். பிறகு தாயாரை நோக்கி, ''அன்புள்ள அன்னையே, எனக்கு ஒரு நல்ல மரணம் கிடைக்குமாறு என்னை ஆயத்தம் செய்யுங்கள்'' என்றாள். அன்புத் தாயார் அவளை நோக்கி, ''அன்புக் குழந்தாய், கடவுளிடம் செல்ல நீ முற்றும் ஆயத்தமாயிருக்கிறாய்; ஏனெனில், தாழ்ச்சியென்றும் புண்ணியத்தை எப்பொழுதுமே நன்கு கண்டுபிடித்திருக்கிறாய்'' என்றார்கள். ''ஆம், என் ஆன்மா உண்மையைத்தவிர வேறு எதையும் தேடினதில்லை... மனத்தாழ்ச்சி என்ன வென்று கண்டுபிடித்திருக்கிறேன்'' என்றாள்.

மணி ஏழு அடித்த பிறகு தெரேசாள் மடத்துத் தாயாரை நோக்கி ''அன்னையே, இது மரண நேரம்தானே, நான் சாகப்போகிறேன் அல்லவா?'' என்று கேட்டாள். ''ஆம் குழந்தாய், இது மரண நேரம்தான். ஆனாலும் இந்த மரண வேதனை சில மணி நேரம் நீடிக்க வேண்டுமென்று ஆண்டவர் விரும்பக்கூடும்'' என்றார்கள் தாயார். ''நல்லது! அப்படியே ஆகட்டும்! என் துன்பம் குறைவுபட வேண்டுமென்று நான் விரும்பவில்லை'' என்றாள். பாடுபட்ட சுரூபத்தை உற்று நோக்கி தன் இதய மணாளனுக்குத் தன் அன்பை முற்றும் அர்ப்பணம் செய்தாள்:



**''ஆ! ... அவரை நான் நேசிக்கிறேன்! ... என் தேவனே ... உம்மை ... நேசிக்கிறேன்.''**

இவை அவளுடைய இறுதிச் சொற்கள். இவ்வார்த்தைகளைச் சொல்லி முடித்ததும் உடம்பு முழுவதும் தளர்வுற்றது. தலை வலப்பக்கம் சாய்ந்தது. அப்பொழுது மணி 7.15. திடீரென்று எழுந்து, தன் கண்களை மரியன்னையின் திருச்சுரூபத்திற்குச் சிறிது மேலே திருப்பி, தன் தெய்வீக மணாளனின் அரவணைப்பை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். அவ்வேளையில் அந்தப் பரிசுத்த ஆன்மா உடலின் தளைகளை அறுத்தெறிந்து நித்திய பேரின்பம் எய்தியது.

# பிள்ளைகளின் புதுநன்மை

**பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் புதுநன்மைக்கு தகுந்த முறையில் தயார்செய்வது எப்படி என்பதை விளக்கும் கட்டுரை**

புதுநன்மை நாள் அல்லது முதற்தடவையாக திவ்விய நற்கருணை உட்கொள்ளுகிற நாள் ஜீவியகாலத்தில் மகா சிறந்த நாள் என்று சொல்லக் கேட்டிருக்கிறாயல்லவா? பிள்ளைகளின் நன்னடத்தைக்கும் நித்தியகால பாக்கியத்திற்கும் புதுநன்மை வாங்குகிற நாளே ஆரம்பமாய் இருக்கக்கூடியது.

பிள்ளையின் இருதயத்தில் இது இன்பமான சம்பவங்களின் ஞாபகத்தை பதியச்செய்கின்றது. "எந்த ஊரில், எந்த இடத்தில், யார் எனக்கு திவ்வியநன்மை கொடுத்தார்" என்பதைப் பிள்ளைகள் மறக்கமாட்டார்கள். தாயானவள் தன் பிள்ளையைக் கரிசனையுடன் மாபெரும் இச்சம்பவத்திற்கு ஆயத்தம் பண்ணுவதில் ஈடுபட்டு இருப்பார்களேயாகில், இந்தக் கரிசனை பிள்ளையின் இருதயத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கும் என்று சந்தேகமறக் கூறலாம். முதலாவது, நெப்போலியன் சக்கரவர்த்தி இத்தாலி யாவைக் கடந்துசெல்லும்போது பட்டாளத்தை விட்டு விலகி அவ்வழியே போய்க் கொண்டு இருந்த ஓர் குருவானவரை அண்டி மகா வாஞ்சையுடன் அவருக்கு வந்தனம் பண்ணினார். அந்தக் குருவானவர்தான் நெப்போலியனைப் புதுநன்மை வாங்க ஆயத்தம் பண்ணினவர். பாவியொருவன் மரணத் தருவாயிலிருக்கும்பொழுது, "சுவாமி நான் தகுந்தவிதமாய்ப் புதுநன்மை வாங்கினேன்; என் தாய் மெத்த நல்லவள். நான் கிறீஸ்தவனாய் மரிக்க ஆசிக்கிறேன்" என்றான். புதுநன்மை நாளின் ஞாபகத்தால் மனந்திரும்பின பாவிகள் அநேகர்.



இந்தப் பாக்கியமான நாள் நெருங்கிவருவதற்குப் பல மாதங்கள் இருக்கும்போதே, உன் பிள்ளையிடம் இதைப் பிரியமாய்ச் சொல்லிக்காட்டு. இது எவ்வளவு மேலான ஆனந்தத்திற்குரிய நாள் என்பதை உன் பிள்ளை நன்றாய் உணரச் செய். பிள்ளைகளின் கருத்தைக் கவர்ந்துகொள்வதற்கும், அவர்களது குற்றங்குறைகளைத் திருத்துவதற்கும், பயபக்திக்குரிய பழக்கவழக்கங்களை அவர்கள் கைக்கொள்வதற்கும், தேவசிநேக அக்கினி அவர்கள் இருதயத்தில் பற்றியெறியச் செய்வதற்கும், இதைவிடச் சிறந்த சாதனம் வேறில்லை.

பாவசங்கீர்த்தனஞ் செய்வதற்குத் தெரியவேண்டிய காரியங்களை அவர்களுக்கு விபரமாய்ச் சொல்லி, முதல் தடவை அவர்கள் செய்யும் பாவசங்கீர்த்தனத்தின்மீது கண்ணுங்கருத்துமாயிரு. விளையாட்டுத்தனமாய் அதை அவர்கள் முடித்து விடாதபடி விழிப்பாயிரு. தன் பிள்ளைகள் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து இருக்கிறார்களா இல்லையா என்று, அவர்களது முகக்குறியைக் கொண்டே கவனமும் கருத்துமுள்ள தாய் கண்டுகொள்வாள். அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பதற்கொப்ப, நல்ல பாவசங்கீர்த்தனம் செய்த பிள்ளையின் மனச் சமாதானம் புத்திக்கூர்மையுள்ள தாய்க்கு அந்தப் பிள்ளையின் முகமலர்ச்சியினால் புலப்பட்டுப்போகும். நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்யாத பிள்ளையின் மனக்கலக்கமும் அவ்வாறே அவள் அறிந்துகொள்வாள். இத்தகைய குறியால் உண்மையை உணர்ந்த தாய், பாவசங்கீர்த்தனம் செய்துவிட்டுவந்த தன் மகனைப் பார்த்து, "ஓ! என்னைப் போல் நிர்ப்பாக்கியவதி உண்டோ! தகுந்தவிதமாய் பாவசங்கீர்த்தனம் செய்யாத மகனுக்குத் தாயாயிருக்கும் பாவி நானே" என்றாள். இவ்வார்த்தைகளைச் செவியுற்ற பையன் முகம் வாடி மனங்கசிந்து, குருவானவரிடம் மீண்டும் போய், நல்ல பாவசங்கீர்த்தனம் செய்தான். இந்தப் பையன் பிற்காலத்தில் மேற்றிராணியாராகி, உறுதிப்பூசுதல் கொடுப்பதற்காக தான் சென்ற ஊர்களிலெல்லாம் இச்சம்பவத்தைச் சுட்டிகாட்டி, "எனக்கு நல்ல தாயில்லா விடில், என் கதி என்னவாயிருக்கும், எனக்கிருந்த நாட்டத்தால் எனக்கு என்ன நேரிட்டிருக்குமென்று யார் சொல்லக்கூடும்" என்பார்.

புதுநன்மைக்கு நாள் நெருங்கி வருவதற்கேற்றாப் போல், உன் கவனமும் கருத்தும், பற்றுதலும் நேசமும்

அதிகரிக்க வேண்டும். உன் வார்த்தைகள், ஜெபங்கள், உன் சகல கிரியைகளும் தேவசிநேகம் பொருந்தியனவாய் இருக்கவேண்டும். உன் பிள்ளை செய்யும் தப்பிதங்களைப் பார்த்துமுதலாய் முறுமுறுக்காதே. புத்திச்சொல், உற்சாகப்படுத்து, வற்புறுத்து, பற்றுதலைக் காட்டு. சேசுநாதர் சிநேகத்தின் தேவனென்றும், அவர் நற்கருணை வழியாய் நமது உள்ளத்தில் எழுந்தருளிவரும்போது ஏராளமான ஞானத் திரவியங்களைக் கொண்டுவருகிறாரென்றும், நமது இருதயத்தில் அவர் காண்கிற சிநேகத்திற்கு அளவாக நம்மை ஆசீர்வதிப்பாரென்றும் பலவிதமாய்ப் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து, அன்பினால் அவர்களை வசப்படுத்தி, ஆண்டவருக்கு அன்பினிமித்தமே அவர்கள் தங்களைக் கையளிக்கும்படி வழிதேடு.

விசேஷமாய், புதுநன்மைக்கு முந்தின தினங்களில் அவர்களை அதிக கவனத்துடன் கண்காணிக்கவேண்டும். உடுப்பு, சட்டை தைக்கவேண்டும், நகைநட்டு செய்து போடவேண்டும், விருந்துக்கு அவசியமான பதார்த்தங்களைத் தயாரிக்கவேண்டும் என்று இத்தகைய இலௌகீக ஆடம்பர விஷயங்களில் புத்தியைச் செலுத்தி, பிள்ளையின் ஆத்தும ஆயத்த விஷயமாய் அலட்சியம் ஏற்படக் காரணம் வைத்துக் கொள்ளாதே. அந்தஸ்துக்குத் தகுந்த ஆடை ஆபரணம் தரிக்கவேண்டாம் என்று சொல்லவில்லை; ஆனால் அளவு கடந்த செலவுசெய்து கடன்படுவானேன்? பிள்ளைக்குப் புத்திவிபரம் தெரிந்தபிறகும், செலவுக்குப் பணமில்லை யென்று சொல்லி புதுநன்மைக்கு அனுப்பிவைக்காமல் காலதாமதம் செய்கிற தாய்மார் நமது நாட்டில் இல்லையா? இது பெரும் அறிவீனம் என்று சொல்லத் தேவையில்லை. ஆண்டவருக்கு உகந்த அன்பும் பரிசுத்தமும் பிள்ளைகள் இருதயத்தைச் சிறப்பிக்கவேண்டுமென்பதே உனது முக்கிய கவலையாயிருக்கவேண்டும். இதற்காக நீயே விசேஷ ஜெபங்கள் செய்வதோடு, உன் குடும்பத்திலுள்ளவர்களும் சிநேகிதர்களும் வேண்டிக்கொள்ளும்படி கேள். புதுநன்மைக்கு முந்தின மூன்று தினங்களில் நடைபெறும் ஞான ஒடுக்கத்தை அவர்கள் தங்கள் வயதுக்குத் தகுந்தாற்போல் நன்றாய்ச் செய்யும்படி கவனி.

திவ்வியநற்கருணை வாங்கும் தினத்தில் அவர்களுக்குக் காணப்படும் காவல் சம்மனசாயிருந்து, கோவிலில் நடக்கும் சகல சடங்குகளுக்கும் அவர்களோடு போ. திவ்விய நற்கருணை பந்தியில் நீயும் அன்று அவர்களுடன் அமர்ந்திருக்க மறந்துப்போகாதே. புதுநன்மை வாங்குகிற பிள்ளையினருகே அதன் தாய் தகப்பன், சகோதரர் சகோதரிகள், உற்றார் உறவினர் அதே தெய்வீகப் பந்தியில் அமர்ந்திருப்பதை காண்பது எத்தகைய மகத்தான காட்சி! மோட்ச காட்சியின் உருவகமிது. தாயாகிய நீயாகிலும் அந்தப் பந்தியிலிருக்க தவறாதே.


பரலோக சந்தோஷத்திற்குரிய இந்நாளில் அழிவிற் குரிய பூலோக ஆனந்தம் பிள்ளைகளின் மனதை சிதறடிக்க விடாதே. ஆட்டமும் பாட்டமும், வீண் ஆடம்பரங்களும் தகுதியற்றவை. காசைக் கரியாக்கிக் கடன்படாதே. அந்தஸ்திற்கு தகுந்த சுத்தமான ஆடை போதும்! இதர நாட்களில்விடச் சிறது இன்பமான போசனம் தயாரிப்பது தகுதியே. உற்றார் உறவினர் பந்தி போசனத்திற்கு வருவதில் பாதகமில்லை. ஆனால் கல்யாணப் பெண்களை சிங்காரிப்பது போல், ஆடை ஆபரணங்களை உன் மகளுக்கு தரித்து ஊர்வலம் வருவது எதற்காக? பிள்ளைகளுக்கு வீண் பெருமையையும் கர்வத்தையும் விளைவிப்பதற்காகவா? இத்தகைய காரியங்களை அறவே நீக்கிவிடு.

அந்தப் பாக்கியமான நாள் முடிவடைந்ததும், சகலமும் முடிந்துபோயிற்றென்று எண்ணாதே. உன் பிள்ளை யிடமுள்ள மாசின்மை எனும் மாதிரவியத்தை கன்னிமை போல் காத்து வர வழிதேடு. அதை அழிப்பதற்கு ஆயிரக்கணக்கான பகைவர் சமயம் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். பிள்ளை புதுநன்மை வாங்கின பிறகு, உன் கடமை அதிகப் பளுவாகிறது, உன் பொறுப்பு அதிகரிக்கிறது; முன்னிலும் அதிக கவனமாயிருந்து, ஆதரிக்கவேண்டும். நல்வழியில் நிலைத்திருக்கும்படி நன்றாய் கவனிப்பது அவசியம்.

இது உன் பிள்ளையைப் பொருத்த விஷயம் என்பது மெய்; ஆயினும் உன் பொறுப்பு நீங்கவில்லை. உன் பிள்ளை பலவீனமுள்ளது, உன் உதவி அவசியம். புண்ணியத்தில் நிலைகொள்வதற்கு தினந்தோறும் ஜெபம் செய்வதும், ஞாயிற்றுக்கிழமை கடன் திருநாட்களை அநுசரிப்பதும், அடிக்கடி தேவதிரவிய அநுமானங்களைப் பெறுவதும், கெட்ட தோழரோடு சேராதிருப்பதும் முக்கியமாய் கவனிக்கவேண்டியவைகள் என்று எல்லோருக்கும் தெரியும். ஆயினும் சில தாய்மார் இதை மறந்துபோகிறார்கள். இதனிமித்தம் சம்பவிப்பதென்ன? புதுநன்மையோடு பிள்ளையின் கிறீஸ்தவ ஜீவியத்திற்கு முடிவு ஏற்பட்டுப் போகிறது. இது எவ்வளவு பரிதாபமான காரியம்!

புதுநன்மை வாங்கின பிறகு, ஓர் அந்தஸ்தை தெரிந்துகொள்ளும் காலம் வருமட்டும், உன் பிள்ளையை ஞானோபதேசத்திற்கு தவறாமல் அனுப்பிவை. ஏனெனில், இந்த வயதுதான் காரியங்களை உணரக்கூடிய வயது. என் பிள்ளை புதுநன்மை வாங்கியாயிற்று, சகலமும் படித்து விட்டான் என்று எண்ணுவதும் சொல்வதும் பெருந்தவறு. இவ்விதம் நினைத்து நடந்து வருவதினால்தான், பிரதான சத்தியங்களை முதலாய் அறியாதவர்களாய் நமது கத்தோலிக்கரில் பெரும்பான்மையோர் காலத்தைக் கடத்திவருகிறார்கள்.

கடைசியாய், உன் பிள்ளை புண்ணிய வழியில் நிலைகொள்ளும்படி ஆண்டவரைப் பார்த்து மன்றாடு. "சர்வேசுரா சுவாமி, என் பிள்ளை உமக்கு எப்போதும், மரணபரியந்தம் பிரமாணிக்கமாயிருக்கும்படி செய்தருளும்" என்று அடிக்கடி ஜெபிப்பாயாக! மெய்யான கிறீஸ்தவ தாய்மார் கேட்கிற இந்த விண்ணப்பம் சர்வேசுரனுக்கு வெகு பிரியமானது; அவர் அந்த விண்ணப்பத்திற்கு இசைந்து நீ கேட்கிற வரத்தை தந்தருளுவார் என்று பூரண நம்பிக்கையாயிரு.




# அர்ச். குவாடலூப்பே மாதா




**(26)** முழுமையாக மலர்ந்திருந்த அந்த ரோஜாச் செடியைக் கண்டபோது, தாம் கனவு காண்பதாக தியேகோ நினைத்தார்: “நான் கனவு காண்கிறேனா?” என்று அவர் தன்னைத்தானே கேட்டுக் கொண்டார். இது கடுமையான குளிர்காலம். ஒரு மலர் கூட காணமுடியாது. அப்படியிருக்க இது எப்படி சாத்தியமாகும் என்று வியந்த அவர், நிறைய ரோஜா மலர்களைப் பறித்தெடுத்து, ஓர் அழகிய மலர்க்கொத்தைத் தயாரித்தார்.







**(27)** தியேகோ நம் அன்னை இருந்த இடத்திற்கு ரோஜா மலர்களோடு திரும்பினார். “நான் பறிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பிய ரோஜா மலர்கள் இதோ. இவற்றை வைத்து நான் என்ன செய்ய வேண்டும்?” என்று தேவதாயிடம் கேட்டார்.

**(28)** அதற்கு தேவதாய், “நான் மேற்றிராணியாருக்குத் தருகிற அடையாளம் இதுதான். போய், இந்த ரோஜா மலர்களை மட்டும் அவரிடம் காட்டு” என்று தியேகோவிடம் கூறினார்கள்.








**(29)** மேற்றிராணியாரின் அரண்மனைக்குள் நுழைந்த தியேகோவை, முன்பு ஆயரிடம் தியேகோவைப்பற்றி தவறாக கூறிய இரண்டு வேலையாட்களும், ஆயரை சந்திக்க விடாமல் தடுக்க முயன்றார்கள். ஆனால் தியேகோ வலுக்கட்டாயமாக உள்ளே புகுந்து, சீக்கிரத்தில், மேற்றிராணியாரின் வரவேற்பு அறைக்குள் போய்விட்டார்.


**(30)** மேற்றிராணியார் தியேகோவிடம் கனிவோடு பேசினார்: ''நல்லது, என் மகனே, கடைசியாக என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறாய்? மேலும் அந்த அடையாளம் எங்கே?'' என்று கேட்டார். அதற்கு தியேகோ ''நம் மாதா உமக்காக என்னிடம் தந்திருக்கிற அடையாளம் இதோ! கடுமையான குளிர் காலத்தில் பறிக்கப்பட்ட ரோஜா மலர்கள்'' என்றார்.





**(31)** மேற்றிராணியார் அந்த ரோஜாக்களைத் தம் கரங்களில் எடுத்தார். உடனே அவர் முழந்தாளிட்டு நெகிழ்ச்சியடைந்து கண்ணீர் சிந்தியபடி, ''உன் மேற்போர்வையில் சித்தரிக்கப்பட்டு உள்ள நம் மாதாவை நான் காண்கிறேன், தியேகோ'' என்று சப்தமாகக் கூறினார்.

**(32)** மேற்றிராணியார் அந்தப் பரிசுத்தமான சித்திரத்தை முத்தமிட்டார். ''தேவதாயே! உங்கள் செய்தியை உடனே நம்ப மறுத்ததற்காக என்னை மன்னியுங்கள், ஓ சர்வேசுரனுடைய மாதாவே, உங்கள் மக்களுக்கு எத்தகைய உன்னதமான பரிசை நீங்கள் தந்திருக்கிறீர்கள்! இது பரலோகத்தன்மை உள்ளதாக இருக்கிறது! மிகவும் அழகான ஒரு தேவாலயத்தைக் உங்களுக்கு கட்ட இப்போதே நான் உத்தரவிடுவேன்'' என்றார்.





**(33)** நம் மாதாவின் திருப்படம் பதிந்துள்ள தியேகோவின் மேற்போர்வையை மேற்றிராணியார் எடுத்து, தம் சிற்றாலயத் திற்குள் வைத்தார். தம் இல்லத்தைச் சேர்ந்த அனைவரையும் அதை வணங்கும்படி அவர் அழைத்தார்! ''நம்மீது தம் ஆசீர்வாதங்களைப் பொழியும்படி, நம் நாட்டைத் தேர்ந்தெடுத் துள்ள கடவுளின் திருத்தாயாருக்கு நாம் எல்லோரும் நன்றி உள்ளவர்களாக இருக்கிறோம்'' என்றார் அவர்.




**(34)** இதனிடையே, தியேகோ மாமாவின் உடல் நிலை இன்னும் மோசமானது. திடீரென அவருடைய குடிசை பிரகாசமடையவே நம் தேவதாய் அவர் முன் தோன்றி: ''எப்படி இருக்கிறாய், என் மகனே?''என்று கேட்டார்கள். அதற்கு அவர் ''நான் சாகக் கிடக்கிறேன்'' என்று மெல்லிய குரலில் பதிலளித்தார். மாதா தொடர்ந்து, ''என்னில் நம்பிக்கை வை. நான் வியாதிக்காரருக்கு ஆரோக்கியமாக இருக்கிறேன். எழுந்து என் மகிமைக்காக ஒரு தேவாலயம் கட்டுவதில் தியேகோவுக்கு உதவி செய். இங்கு நான் குவாடலூப்பே மாதா என்ற பெயரில் வணங்கப்பட விரும்பு கிறேன்''என்றார்கள்.




**(36)** தியேகோவும் அவருடைய மாமா பெர்னார்தீனும் மேற்றிராணியாரிடம் விரைந்து சென்று நடந்த எல்லாவற்றையும் விவரித்துக் கூறினார்கள். மேற்றிராணியார், ''குவாடலூப்பே என்பதன் அர்த்தம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று அவர்களிடம் கேட்க, அவர்கள், ''தெரியாது'' என்று பதிலளித்தார்கள். அதற்கு அவர், ''பாம்பை நசுக்குகிறவர்கள் என்று அர்த்தம். உண்மையில் நரக சர்ப்பமாகிய பசாசின்மீது வெற்றிகொள்கிறவர்கள் என்ற பெயரில் நாம் வணங்க வேண்டும் என்று நம் மாதா விரும்புகிறார்கள்'' என்று விவரித்துக் கூறினார்.

**(35)** தியேகோவின் மாமா பெர்னார்தீன் உடனே எழுந்து தன் மருமகனிடம் ஓடிச் சென்று தான் கண்ட காட்சி பற்றிக் கூறினார்: ''நம் மாதா என்னைக் குணமாக்கிவிட்டார்கள். டெப்பேயாக் குன்றின் உச்சியில் ஒரு தேவாலயம் கட்ட நாம் முயற்சி எடுக்க வேண்டுமென்றும், அங்கே அவர்கள் குவாடலூப்பே மாதா என்று அழைக்கப்பட வேண்டுமென்றும் விரும்புகிறார்கள்'' என்று கூறினார்.




**(37)** நாட்கள் செல்லவே, நம் மாதாவின் காட்சிகள் பற்றிய செய்தி விரைவில் எவ்விடமும் காட்டுத்தீ போலப் பரவியது. பெருங்கூட்டம் கூட்டமாக மக்கள் நம் மாதாவின் திருப்படத்தைக் தரிசித்து, அதற்கு வணக்கம் செலுத்தும்படி மேற்றிராணியார் இருந்த சிற்றாலயத்திற்கு வரத்துவங்கினர்.

**(தொடரும்)**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

## வேதசாட்சிகளின் இராக்கினியே
## எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !



### வேதசாட்சியின் மாதா !

கிறீஸ்துநாதருக்காக, அவரது வேதத்திற்காக தங்களது இரத்தத்தைச் சிந்தி மரிப்போர் மட்டுமல்லாமல், விரோதிகள் கையில் சாவுக்கேதுவான வேதனைகளை அனுபவிப்போரும் கூட "வேதசாட்சிகள்" என்று அழைக்கப்படுவது உண்டு. தேவ அன்னையும் இவ்விதமாகவே வேதசாட்சியமானார்கள். அர்ச். பெர்னார்டு கூறுவதுபோல, மாதா கொலைஞரின் வாள்முனையாலல்ல, ஆனால் தன் ஆன்மாவில் அனுபவித்த **சகிக்க இயலா வியாகுலத்தால்** வேதசாட்சியானார்கள். அதிலும் இந்த வியாகுலம் ஒரு முறையல்ல, அநேகம் அநேக முறை அவர்களுக்கு மரணம் வருவிக்கக்கூடியதாயிருந்தது. ஆகவே தேவ அன்னை ஓர் வேதசாட்சி. மற்ற வேதசாட்சிகளைவிட பன்மடங்கு அதிகமான வியாகுலங்களை - துன்பங்களை அனுபவித்த மாதா தமது வேதனைகளை தன் ஆன்மாவில் அனுபவித்தார்கள். அதுவும் நீண்ட கால வேதனையாயிருந்தது.

### பிற வேதசாட்சிகளைவிட அதிக வேதனை !

தேவ அன்னை மற்ற வேதசாட்சிகளைக்காட்டிலும் அதிக வேதனையை அனுபவித்தார்கள். கிறீஸ்துநாதருக்குப்பின் அவரது அன்னையைப் போல் அதிக வேதனை அனுபவித்தவர் யாருமில்லை. எல்லா வேதசாட்சிகளின் வேதனைகளையெல்லாம் ஒன்றாகத் திரட்டினாலும் தேவதாய் அனுபவித்த வேதனைகளுக்கு ஈடாகாது. "எருசலேம் குமாரத்தியே! உன்னை எவ்வாறு தேற்றுவேன்? உன்னை யாரைப்போல் என்பேன்? உன்னை யாருக்கு சமமென்பேன்? சீயோன் கன்னிகா குமாரத்தியே நான் உன்னை எவ்வாறு தேற்றுவேன்? உன் நெருக்கிடை கடலைப்போல் அபாரமாயிருக்கிறது" (ஜெ.பு. 1:12) என்ற ஜெரேமியாஸ் வார்த்தைகள் தேவ அன்னைக்குப் பொருந்தும்.

### மாதாவின் வேதனை ஆன்மாவில் !

ஏனைய வேதசாட்சிகளெல்லோரும் தங்கள் சரீரங்களில் வேதனை அனுபவித்தார்கள். தேவ அன்னையோ சிமியோன் முன்னுரைத்ததுபோல் (லூக். 2:35) தன் ஆன்மாவில் அனுபவித்தார்கள். ஒரு வஸ்து எவ்வளவுக்கெவ்வளவு மேன்மையுறுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது அனுபவிக்கும் வேதனையும் அதிகரிக்கிறது. தீயோர் அனுபவிக்கும் மனவேதனையைவிட, புண்ணியவான்கள் தங்களுக்கு வரும் வேதனையை அதிகமாக உணருகிறார்கள். அப்படிப் பார்த்தால் தேவ அன்னையின் ஆன்மா மற்ற வேதசாட்சிகளின் ஆன்மாக்களைகாட்டிலும் மிகவும் உயர்ந்தது. ஆகையால் அவர்களது துன்ப துயரங்களும், வேதனையும் மிக அதிகமாக இருந்தது. இதனாலேயேதான் தேவ அன்னை "**வேதசாட்சி**" என்றும், அதற்கு மேலாக "**வேதசாட்சிகளுடைய இராக்கினி**" என்றும் தாய் திருச்சபை போற்றி வேதசாட்சிகளின் இராக்கினியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று பிரார்த்திக்கிறது.

### படத்தின் விளக்கம்

படத்தில் சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட தமது திருக்குமாரனின் உயிரற்ற சரீரத்தை வேதசாட்சிகளின் இராக்கினயான மரியாய் மடியிலே ஏந்தியவர்களாய் பரம பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். அவர்கள் இருக்கும் பாறையின்கீழ் அர்ச். ஜார்ஜியார், அர்ச். லாரன்ஸ், அர்ச். தாமஸ் பெக்கெட் மற்றும் தவத்தில் சிறந்த அர்ச். ஜெரோமும் காணப்படுகிறார்கள்.

மேலே வேதசாட்சிய முடியை அர்ச். பெர்நார்டு தேவதாய்க்கு சூட்டுகிறார். அவரே அவர்களின் வேதசாட்சியத்தை அதிகம் உரைத்தவர். "உம்முடைய ஆத்துமத்தை" ஊடுருவும் ஓர் வாள் இரு இருதயங்களை ஊடுறுவிச் சென்றுள்ளது. இதன் பொருள்: தமது குமாரனைத் தொடாத ஈட்டி மரியாயின் ஆன்மாவை ஊடுருவியது என்பதாகும். கல்வாரியில் சேசுவின் விலாவை குத்தித் திறந்த ஈட்டியானது, சேசுவின் இதயத்தை குத்தினாலும், அவருக்கு வேதனை தரவில்லை. ஆனால் மரியாய் அந்த வேதனையை தமது இருதயத்தில் பெற்றுக்கொண்டார்கள். (*In Dom. Oct. Ass. 14 & Apoc. 17:6*)

**வேதசாட்சிகளுடைய இராக்கினியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !**

# புண்ணியப்பயிற்சிக்குரிய சில அறிவுரைகள்

**நாம் கடைப்பிடிக்கவேண்டிய புண்ணியங்கள் எவை என்பதைத் தேர்ந்துகொள்ளுதல்**

"பக்திநெறி வழிகாட்டி" யிலிருந்து எடுக்கப்பட்டது

ஒரு தேன் கூட்டில் இன்பமாய் வாழும் தேனீக்களின் அரசி வயல்வெளிக்குப் பறந்து செல்லும்பொழுது, அக்கூட்டிலுள்ள தேனீக்களெல்லாம் அதைப் புடைசூழ்ந்து செல்கின்றன. இவ்வாறே தேவ சிநேகம் ஓர் ஆன்மாவில் குடிகொள்ள வரும்பொழுது, ஏனைய புண்ணியங்களெல்லாம் அதைப் புடைசூழ்ந்து வருகின்றன. ஒரு படைத் தலைவன் தன் படை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதுபோல் தேவ சிநேகம் ஏனைய புண்ணியங்களுக்கு நற்பயிற்சி தருகின்றது. ஆனால் ஒரே சமயத்தில், ஒரே சீராக, ஒரே வகையில் இந்தப் பயிற்சி நடைபெறுவதில்லை. "நீர்வாய்க்கால் ஓரத்தில் நாட்டப்பட்டு, உரிய காலத்தில் கனிதரும் மரத்திற்கு நீதிமான் ஒப்பாய் இருக்கிறான்" என்று வேதாகமம் கூறுகின்றது. ஆன்மாவில் நீர் பாய்ச்சும் தேவ சிநேகம், உரிய காலத்தில் ஒவ்வொரு புண்ணியத்தையும் தோற்றுவிக்கும். "சமயத்திற்கு தகாத சம்பாஷனை துக்கத்தில் பாடுவது போலாகும்" என்று சீராக் ஆகமம் கூறுகின்றது. ஒரு புண்ணியத்தைக் கடைபிடிக்க தொடங்கும் சிலர், அதே புண்ணியத்தை எந்தச் சூழ்நிலையிலும் கடைப்பிடிக்கவேண்டும் என்று தவறாக நினைத்துக் கொள்கிறார்கள். சிரித்தால் எப்பொழுதும் சிரிக்க வேண்டும், அழுதால் எப்பொழுதும் அழவேண்டும் என்று போதித்த சில பழங்கால அறிஞர்களை இவர்கள் பின்பற்றுகிறார்கள். தாங்கள் கடைப்பிடிக்கும் புண்ணியங்களையே தங்களைப்போல் பிறரும் எப்பொழுதும் கடைப்பிடித்துக்கொண்டே இராவிடில், இவர்கள் பிறரை இகழ்ந்து பழிப்பார்கள். இது அறியாமையின் விளைவேயாகும். ஏனெனில் "மகிழ்பவர்களுடன் மகிழுங்கள், அழுபவர்கள் உடன் அழுங்கள், அன்பு பொறுமையுள்ளது, இரக்கமுள்ளது, பெருந்தன்மை உள்ளது, விவேகமுள்ளது, கனிவுள்ளது" என்கிறார் அர்ச். சின்னப்பர்.

ஆனாலும் எல்லோரும் கடைப்பிடிக்கவேண்டிய சில புண்ணியங்கள் உண்டு என்பதையும் நாம் மறக்கலாகாது. அந்தப் புண்ணியங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கடைப்பிடிப்பதோடு நில்லாது, அவற்றின் ஒளி நம் அன்றாட வாழ்க்கையின் அலுவல்களிலும் பரவவிடவேண்டும். அஞ்சாமை, பெருந்தன்மை, வள்ளன்மை முதலிய புண்ணியங்களைக் கடைப்பிடிக்கும் வாய்ப்பு நமக்கு எப்பொழுதும் கிடைப்பதில்லை. ஆனால் சாந்தம், மட்டுத்திட்டம், அடக்கவொடுக்கம், தாழ்ச்சி முதலிய புண்ணியங்கள் நம் அன்றாட அலுவல்கள் அனைத்தையும் ஒளிமயமாக்க வேண்டும். இந்த புண்ணியங்களைவிட மேலான வேறு புண்ணியங்கள் உண்டு என்பது உண்மையே. ஆனால், நமக்கு மிகவும் தேவையான புண்ணியங்கள் இவைதாம். உப்பைவிட மேலானது சர்க்கரை; ஆனால் சர்க்கரையைவிட மிகுதியாக நாம் பயன்படுத்துவது உப்பைத்தான். ஆகவே, நமக்கு எப்பொழுதும் தேவையான இந்தப் புண்ணியங்களைக் கடைப்பிடித்து அவற்றில் சிறந்த பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.



**அர்ச். பிரான்சிஸ் சலேசியார்**
**திருச்சபையின் வேதபாரகர்**

நம் விருப்பு வெறுப்புகளுக்கொப்ப புண்ணியங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் பயிற்சி பெறுவது போதாது. நம் வாழ்க்கைத் துறையின் கடமைகளை இனிது நிறைவேற்றத் தேவையான புண்ணியங்களைத்தான் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அர்ச். சின்னம்மாள் ஆன்மீக இன்பம் மிகுதியாக அடையவேண்டும் என்ற ஆவல்கொண்டு கடின தவச்செயல்களையும், ஒறுத்தல் முயற்சி களையும் செய்யத் தொடங்கினாள். ஆனால் அவளது ஆன்மீக அதிகாரிகள், இதற்கு ஆதரவு

அளிக்கவில்லை. ஆகவே, அவளுடைய மேற்றிராணியாரின் அறிவுரைகளுக்கு மாறாக இவ்வாறு கடின ஒறுத்தல் முயற்சிகள் செய்தது முற்றும் தவறென்று, அர்ச். ஜெரோம் எடுத்துக் காட்டியிருக்கிறார். நற்செய்தியைப் போதித்து, வானக உணவை ஆன்மாக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் கடமை அப்போஸ்தலர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஏழைகளைப் பராமரிப்பது எவ்வளவுதான் சிறந்த பணியாய் இருந்த போதிலும் தங்கள் முக்கியமான கடமைக்கு இது தடையாயிராமல், அவர்கள் மிகவும் விழிப்பாயிருந்தார்கள். ஒவ்வொரு வாழ்க்கைத் துறைக்கும் உரிய சில புண்ணியங்கள் உண்டு. ஓர் மேற்றிராணியாரிடம் விளங்கவேண்டிய புண்ணியங்கள், ஓர் அரசனிடமோ, போர்வீரனிடமோ நாம் எதிர்பார்க்க முடியாது. ஒரு குடும்பத்தலைவி கடைப்பிடிக்க வேண்டிய புண்ணியங்களையெல்லாம் ஒரு கைம்பெண் கடைப்பிடிக்க முடியாது. எல்லோரும் எல்லாப் புண்ணியங் களையும் கடைப்பிடிக்க வேண்டுமெனினும், ஒரே வகையில் கடைப்பிடிக்க முடியாது. ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கைத் துறைக்குத் தக்கவாறு புண்ணியங்களை கடைப்பிடிக்கவேண்டும்.

நமக்குக் கடமையில்லாத புண்ணியங்களைக் கடைப் பிடிக்க முற்படுகையில், பார்வைக்குப் பகட்டானவைகளை தேடாமல், மிகச் சிறந்த புண்ணியங்களைத் தெரிந்து கொள்வோம். வால் நட்சத்திரங்கள், விண்மீன்களைவிடப் பெரியனவாகவும் பகட்டாகவும் தோன்றும். ஆனால் அழகிலோ, பரப்பளவிலோ அவை விண்மீன்களுக்கு நிகராகா. அவை பூமியோடு மிக நெருங்கியிருப்பதால் மட்டும் பெரியனவாகக் காணப்படுகின்றன. இவ்வாறே சில புண்ணியங்கள் வெளிப்பார்வைக்கும் கவர்ச்சிகரமாகத் தோன்றுவதால் சாதாரண மக்கள் அவற்றைக் கடைப்பிடித்து வருகிறார்கள். பெருந்தன்மையாக எப்பொழுதும் நடந்து கொள்வதைவிட சிலவேளைகளில் பிச்சைக் கொடுப்பதுதான் பெரிதென்று நினைத்துவிடுகிறார்கள். பணிவு, கனிவு, அடக்கவொடுக்கம், தன்னல மறுப்பு முதலிய சிறந்த ஆன்மீகப் பண்புகளைவிட உபவாசமிருத்தல், மயிர்ச்சட்டை அணிதல், கசையடி அடித்தல் முதலிய உடல் ஒறுத்தல்களை மேலானவை யாக எண்ணிவிடுகிறார்கள். ஆகவே, பக்தியுள்ள ஆன்மாவே! மனிதரால் போற்றப்பட்டு கொண்டாடப்படும் பகட்டான புண்ணியங்களைத் தேடாமல், சிறந்த மேலான புண்ணியங் களையே தேர்ந்துகொள்.

ஏதேனும் ஒரு புண்ணியத்தைத் தேர்ந்து அதில் நாம் தனிப்பட்ட பயிற்சி பெறுவது மிகவும் பயன்தரவல்லதாகும். அதற்கென்று பிற புண்ணியங்களைப் புறக்கணிக்க வேண்டு மென்று நான் சொல்லவில்லை. நம் மனதிற்குப் பயிற்சி தந்து நம்மைச் செயலாற்றத் தூண்டுவதற்கு இது துணைசெய்யும் என்பதற்காகத்தான் இந்த அறிவுரை கூறுகிறேன். ஒருநாள் மிகவும் அழகுவாய்ந்த ஓர் இளம் பெண், ஓர் அரசிக்குரிய ஆடைகளை அணிந்து, ஒலிவ மரத்தளிர் முடி புனைந்து, பகலவனைப்போல் பொன்னொளி வீசி, அலெக்சாந்திரியா நகர் பேராயரான அர்ச். அருளப்பருக்குக் காட்சி தந்து “நான் அரசனின் மூத்த புதல்வி. என்னை நீர் உம் நண்பராகத் தேர்ந்துகொண்டால், அரசனுக்கு முன்னால் உம்மை அழைத்துச்செல்வேன்” என்றாள். ஏழை எளியவர்கள் மேல் இரக்கம் காட்ட வேண்டுமென்று இந்தக் காட்சியினால் கடவுள் கற்பிக்கிறாரென்று அர்ச். அருளப்பர் உணர்ந்து அன்றுதொட்டு ஏழைகளின் சேவைக்குத் தம்மை முற்றும் கையளித்தார். அவருடைய கொடைத்திறனைக் கண்ட மக்கள் அவருக்கு அருளப்ப வள்ளலார் என்று பெயர் சூட்டினார்கள்.

அலெக்சாந்திரியா நகர் எவுலோஜியஸ் என்பவர் ஏதேனும் ஒரு புண்ணியத்தில் சிறந்த பயிற்சிபெற்றுக் கடவுளுக்கு ஊழியம் புரிய வேண்டுமென்று எண்ணினார். ஆனால் வனவாசம் செய்யவோ, இன்னொருவருக்கு முற்றும் கீழ்ப்படிந்து வாழவோ போதிய உடல் நலம் தமக்கில்லை என்று உணர்ந்தார். ஆகவே, பிறர்சிநேகம், ஒறுத்தல் ஆகிய புண்ணியங்களில் பயிற்சிபெறத் தீர்மானம் செய்து, ஒரு தொழுநோயாளியை தம் வீட்டிற்கு அழைத்துவந்து அவருடன் வாழ்ந்து அவருக்குப் பணிவிடை செய்துவந்தார். இந்தச் சேவையை இன்னும் சிறந்த முறையில் புரிய ஆவல்கொண்டு, அந்த நோயாளியைத் தம் குருவாகவும் தலைவராகவும் கருதி அவருக்குப் பணி செய்வதென்று வார்த்தைப்பாடு கொடுத்தார். இவ்வாறு, இருவரும் ஒரே வீட்டில் வாழ்ந்துவருகையில் ஒரு நாள் ஒருவரொருவரைவிட்டுப் பிரிந்து வாழ்வதுதான் நல்லது என்று எண்ணினார்கள். தங்கள் கருத்தை வனவாசியான அர்ச். அந்தோனியாருக்குத் தெரிவித்தார்கள். அவர் மறுமொழியாக “என் அன்பார்ந்த பிள்ளைகளே, நீங்கள் ஒருவரொருவரைவிட்டுப் பிரியாதீர்கள். உங்கள் வாழ்வின் முடிவு நெருங்கியிருக்கிறது. நீங்கள் பிரிந்திருப்பதை வானதூதர் கண்டால், உங்கள் மணிமுடிகளை நீங்கள் இழந்துவிடக் கூடும்” என்றார்.

அர்ச். ஞானப்பிரகாசியார் அரசர், மருத்துவமனை களுக்குச் சென்று பிணியாளரைப் பராமரித்து வந்தார். தம் வேலைக்கு ஊதியம் பெறுபவர்போல், தம் கையாலேயே அந்தப் பிணியாளருக்குப் பணிவிடை புரிந்துவந்தார். அர்ச். பிரான்சீஸ் அசிசியார் ஏழ்மையை நேசித்து அந்தப் புண்ணியத்தை தம் அன்புக்குரியவள் என்று அழைத்துவந்தார். அர்ச். சாமிநாதர் போதிப்பதில் எவ்வளவு ஆர்வம்கொண்டா ரெனில், அவர் நிறுவிய துறவற சபைக்குப் போதகர் சபை என்ற பெயர் அமைந்தது. பிதாப்பிதாவாகிய அபிரகாமின் முன்மாதிரியைப் பின்பற்றி அர்ச். பெரிய கிரகோரியார் பயணிகளை வரவேற்று மகிழ்ந்தார். அதற்குக் கைமாறாக வானக அரசரே ஒருநாள் பயணியாக வந்து அவருக்கு விருந்தினரானார். தோபியாஸ் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்து பிறர்சிநேகம் என்னும் புண்ணியத்தைக் கடைப்பிடித்தார். அர்ச். எலிசபெத் அரசி, தன் அழகான ஆடைகளையும் அரசவையின் பகட்டுகளையும் துறந்து, தன்னையே தாழ்த்தி ஆன்ம இன்பம் கண்டடைந்தாள். ஜெனோவா நகர் அர்ச். கத்தரீனம்மாள் தன் கணவன் இறந்த பிறகு ஒரு மருத்துவமனையில் பிணியாளருக்கு ஊழியம் புரிந்துவந்தாள். ஒருநாள் மிகவும் பக்தியுள்ள இளம்பெண் அர்ச். அத்தனாசியாரிடம் சென்று பொறுமை என்னும்




**அர்ச். ஞானப்பிரகாசியார்**

**பிரான்ஸ் தேசத்து அரசர்**

புண்ணியத்தில் பயிற்சி பெற தான் மிகவும் ஆவல் கொண்டு இருப்பதாகக் கூறினாள். அவளுடைய விருப்பத்திற்கு இணங்கி, தாங்க முடியாத மூர்க்கத்தனமும், முன்கோபமும், முரட்டுக்குணமுமுள்ள ஓர் ஏழை விதவையைத் தன்னுடன் அழைத்துச்சென்று தன் வீட்டிலேயே தங்குமாறு வற்புறுத்த அறிவுரை கூறினார். அந்த விதவை இந்தப் பக்தியுள்ள பெண்ணை அடிக்கடி கோபித்து, இகழ்ந்து, பொறுமை என்னும் புண்ணியத்தை அனுசரிக்க வாய்ப்பு அளித்தாள் என்று காசியன் என்பவர் எழுதிவைத்திருக்கிறார். இவ்வாறே கடவுளுக்கு ஊழியம் புரிய விரும்பும் விசுவாசிகளுள் சிலர் ஏழைகளையும் பிணியாளரையும் பராமரிப்பதிலும், வேறு சிலர் குழந்தைகளுக்கு கிறீஸ்தவக் கல்வி புகட்டுவதிலும், மற்றும் சிலர் பாவிகளை மனந்திருப்புவதிலும், இன்னும் சிலர் கோவில்களையும் பீடங்களையும் அலங்கரிப்பதிலும் ஏனையோர் மனிதரிடை அமைதி காப்பதிலும் கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள். பின்னல் வேலையில் கைதேர்ந்த வர்கள் பற்பல வகை ஜரிகை நூல்களால் அழகான பூக்களைப் பின்னி, ஆடைகளை அழகுபடுத்துகிறார்கள். இவ்வாறே விசுவாசிகள், ஒரு சில புண்ணியங்களில் தனிப்பட்ட பயிற்சி பெற்று அவற்றை அடிப்படையாக வைத்து அவற்றோடு பற்பல புண்ணியங்களை அழகுறப் பின்னி இணைத்து தங்கள் ஆன்மாவை வளமாக்குகிறார்கள். ஏதேனும் ஒரு தீய நாட்டம் நம்மில் தலைதூக்குவதைக் கண்டால், அதற்கு எதிரான புண்ணியத்தில் பயிற்சிபெற்று, அந்தப் புண்ணியத்தோடு ஏனைய புண்ணியங்களை இணைக்க முயல்வதே நலம். இவ்வாறுதான் நம் எதிரியை அடிமைப்படுத்தி, ஞான வாழ்க்கையில் முன்னேற்றம் காண்போம். அகந்தை அல்லது கோபம் என்னில் தலை எடுப்பதைக் கண்டால், அவற்றிற்கு எதிரான தாழ்ச்சி, கனிவு ஆகிய புண்ணியங்களை ஒவ்வொரு செயலிலும் கடைப்பிடிக்க முயல்வேன். அத்துடன் என் ஜெபங்களையும், தேவதிரவிய அநுமானங்களையும் இவ்விரண்டு புண்ணியங்களில் நான் சிறந்த பயிற்சி பெறும் வகையில் இணைப்பேன். காட்டுப்பன்றி ஆபத்து வேளையில் தன் தந்தத்தை மற்ற பற்களால் தேய்த்து கூர்மையாக்குகிறது. அந்த உராய்தலால் பற்களெல்லாம் உரம் பெறுகின்றன. இவ்வாறே ஒரு புண்ணியத்தைத் தனிப்பட்ட முறையில் கடைப்பிடித்து, ஆன்ம முன்னேற்றம் காண விரும்பும் விசுவாசிகள், பிற புண்ணியங்களால் அந்த ஒரு புண்ணியத்திற்கு இன்னும் மிகுதியான உரமிடுவார்கள். இவ்வாறு புண்ணியங்கள் எல்லாம் அவர்களில் வளர்ச்சியடையும். பிதாப்பிதாவாகிய யோபு என்பவர் தமக்கு ஏற்பட்ட பல்வேறு சோதனைகளில் பொறுமை என்னும் புண்ணியத்தைப் பழுதறப் பாதுகாத்தார். இவ்வாறே, பிற புண்ணியங்களிலும், பயிற்சிபெற்று சிறந்த விசுவாசியானார். ஒரேயொரு புண்ணியச் செயலை மிகவும் சிறந்த முறையில் செய்து, ஒருவன் உச்சிதம் அடைய முடியும் என்று அர்ச். கிரகோரி நசியானசெனார் கூறுகிறார். ராஹாப் என்பவளுடைய வாழ்க்கை இதற்கு எடுத்துக்காட்டு என்கிறார். ராஹாப் மிகச் சிறந்த முறையில் விருந்தோம்பிப் பெருந்தன்மை காட்டி அரும்புகழ் எய்தினாள். ஆனால் இத்தகைய சிறப்பு நமக்கு உரித்தாக வேண்டுமெனில், புண்ணியச்செயலை மிகுந்த தேவசிநேகத்தோடும், பக்தியுருக்கத்தோடும் செய்யவேண்டும்.

**"பக்திநெறி வழிகாட்டி என்ற இந்த நூல் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய ஒன்று. இதை அனைவரும் படித்து பயனடையவேண்டும் என்று விரும்புகிறேன். கிறீஸ்தவ பக்திநெறி எங்கும் செழித்தோங்க இந்த நூல் பெரிதும் துணைபுரியும். இதன் வழியாய் கிறீஸ்துவ மக்களிடையே பக்தி பரவுவதை கண்டு திருச்சபை அகமகிழும்"** – பாப்பரசர் 11–ம் பத்திநாதர்.



# தேவமாதா பிறந்த நாள்

*(செப்டம்பர்– 8)*

- சங். J.M. நிக்கொலாஸ் சுவாமி

**கடவுளுக்கு அழகிய நாள்.** இந்த நாளில் பூமியில் பேரதிசயம் ஒன்று நிகழ்ந்தது. ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவள் சிருஷ்டி என்றாலும் அவள் பிதாவாகிய சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமுள்ள குமாரத்தி, நித்திய வார்த்தையாகிய சுதனாகிய சர்வேசுரனுக்கு மாதாவாக இருந்தவள், இஸ்பிரீத்துசாந்துவின் நேச பத்தினி. அவள் சிறு குழந்தை என்றாலும் சகல சிருஷ்டிகளையும்விட மகத்துவத்திலும் பதவியிலும் உயர்ந்தவள். இதற்கு முன் இருந்தவர்கள், இனி இருக்கப் போகிறவர்கள் அனைவரிலும் மேம்பட்டவள். ஏனெனில் ஏனைய சிருஷ்டிகள் கடவுளது ஊழியர்களே; மரியாயோ கடவுளுடைய குமாரத்தி, கடவுளுடைய மாதா, கடவுளுடைய பத்தினி, சுபாவத்திற்கு மேலான கொடைகள் அனைத்தையும் அவள் நிரம்பக் கொண்டிருந்தாள். பிதாவாகிய சர்வேசுரனது வல்லமையின், சுதனுடைய ஞானத்தின், இஸ்பிரீத்துசாந்துவுடைய அன்பின் உயர்ந்த சிருஷ்டிப்பு அவள். பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்து இவர்களுடன் அவள் அந்நியோன்னிய உறவுகொள்ளவேண்டியிருந்தமையால் அவள் இவ்வுன்னத நிலையில் உண்டாக்கப்பட்டாள். அவளை அவர்கள் அன்புடன் நோக்கினார்கள், கண்டு ஆனந்தம் கொண்டார்கள்; ஒருவன் தன் கைவேலையைக் கண்டு இன்புறுவதுபோல் அவர்கள் மரியாயைக் கண்டு இன்புற்றார்கள்.

ஓ மரியாயே, தொட்டிலில் இருக்கும் நீர் பூமியில் கடவுளது பரகதி, வர்ணிக்க முடியாத அழகு வாய்ந்தவள், மாசு மறுவின் நிழல் முதலாய் அணுகாதவள். நீர் இன்னும் குழந்தையாயிருக்கும்போதே மிகவும் பரிசுத்த தமதிரித்துவம் உம்மைக் கண்டு மகிழ்ந்தது. ஓ நீர் பாக்கியவதி. கடவுளுக்குப் பிரியப்படுவது மிகப்பெரும் பாக்கியமாகும். இந்தப் பாக்கியத்தை, ஓ என் அன்னையே, நீர் பிறந்தநாளில் இருந்தே நீர் அனுபவித்திருக்கிறீர். நான் பரிசுத்த வாழ்வு நடத்துவேனானால், அனைத்தையும் கடவுளுக்காகச் செய்து வருவேனானால், இந்தப் பாக்கியத்தை நானும் ஓரளவு அனுபவிக்கலாம். ஓ என் சர்வேசுரா, உமக்குப் பிரியப்பட வேண்டுமானால், என்னிடம் நல்ல மனது இருக்கவேண்டும்; உமக்குப்பிரியப்பட நான் சிரமத்தைப் பாராமல் முயல வேண்டும்.

**மரியாயி பிறந்த நாள் அவளுக்கு அழகிய நாள்.** தன் தாயான அன்னம்மாளால் தான் அன்புடன் நேசிக்கப்படுவதையும், பரகதிக்கு பூமியானது அன்பளிப்பாகத் தரக்கூடிய மிக்க அழகிய கொடையாக அன்னம்மாளால் மிகவும் பரிசுத்த தமதிரித்துவத்திற்கு தான் ஒப்புக்கொடுக்கப்படுவதையும், மூன்று தேவ ஆட்களாலும் அன்புடன் தான் ஏற்றுக் கொள்ளப்படுவதையும் பார்ப்பது மரியாயிக்கு எத்தனையோ ஆனந்தத்தை அளித்திருக்கவேண்டும். தன் பரிசுத்த அன்னையின் பக்தி உணர்ச்சிகளுடன் தன்னையும் ஒன்றித்து, தன்னை முழுமையும் மகோன்னதரான கடவுளுக்கு ஒப்புக் கொடுப்பதும், அவருக்காகவே வாழத் தீர்மானிப்பதும், மரியாயிக்கு எத்தனை மகிழ்ச்சி தந்தது. அவளது காணிக்கையைக் கண்ட கடவுள் அவளுக்கு உயர்ந்த கொடைகளை நிரம்பக் கொடுத்தது என்ன காட்சி! “ஓ என் நேசமே, நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதே கிடையா” என்னும் உன்னத சங்கீதாகம வசனங்களால் மிகவும் பரிசுத்த தமதிரித்துவம் தன்னை வந்திப்பதைக் கண்டு, அவள் எத்தனை மகிழ்ந்திருப்பாள்! “இவள் எவ்வளவு அழகானவள்! பூமியில் மலர இருக்கும் இம் மலர் எத்தனை அழகு பொருந்தியது!” என சம்மனசுக்கள் அனைவரும் சேர்ந்து கூறி வாழ்த்தியதை அவள் கேட்டாள். “மரியாயி அருணோதயம் போன்றவள்; சந்திரனைப் போல் அழகுள்ளவள், சூரியனைப்போல் காந்தி படைத்தவள்” (உந்.சங்.6:9) மகிழ்ச்சியடைய இத்தனை காரணங்கள் இருந்தன. மரியாயோ “என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது; என் இரட்சண்யமாகிய சர்வேசுரனிடத்தில் என் மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கிறது” என தன் உள்ளத்தில் உரைத்தாள்.

பரிசுத்த கன்னிகையின் மகிழ்ச்சியுடன் ஒன்றித்து கடவுளை மகிமைப்படுத்தி, மரியாயை வாழ்த்துவோமாக. நமது மகிழ்ச்சியனைத்தையும் கடவுளில் வைக்கவும், வேறெந்த மகிழ்ச்சியையுமே தேடாதிருக்கவும் அவளிடமிருந்து கற்றுக்கொள்வோமாக. கடவுளில் மாத்திரமே, உண்மையான மகிழ்ச்சி உண்டு; இதுமாத்திரமே இருதயத்தைப் பூரணமாய்த் திருப்தி செய்கிறது, பரகதியின் முன் சுவையைத் தருகிறது.

**மரியாயி பிறந்த நாள் மானிட சந்ததிக்கு அழகிய நாள். அது மகிமை பொருந்திய நாள்.** ஆதாமின் சந்ததியில் பிறந்த ஒரு குழந்தை

கடவுளின் மாதாவும், கடவுளின் பத்தினியுமாகத் தேர்ந் தெடுக்கப்படுவது மனித சுபாவத்திற்குப் பெருத்த மகிமை யல்லவா? இதற்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்.

**அது பாக்கியமான நாள்.** நீதியின் சூரியனானவரின் முன்னோடியான நட்சத்திரம் உதித்த நாள், தேவ நீதியின் சமுகத்தில் மானிடரின் மத்தியஸ்தியாகவும், மனிதருக்காக பரிந்து பேசுகிறவளாகவும் இருக்கவேண்டியவள் பிறந்த நாள் பாக்கியமான நாளே.

**அது நம்பிக்கையின் நாள்.** ஏனெனில் இந்தத் திருக் குழந்தை ஒரு நாள் நம் அன்னை ஆவாள்; நம்மைப்பற்றி கடவுள் கொண்டுள்ள அன்பும் இரக்கமும் நிறை திட்டங்களை நிறைவேற்ற இவள் ஒத்துழைப்பாள்.

தொட்டிலில் இருக்கும்பொழுதே அவள் ஜெபிக்கிறாள். அவள் தன்னை அர்ச்சித்து புண்ணியங்களில் நாளுக்குநாள் அதிகரிக்கும் வண்ணம் தனக்காக ஜெபிக்கிறாள். நமக்காக அவள் ஜெபிக்கிறாள், ஏனெனில் தனது வேலை உலகத்தைக் காப்பாற்றுவதும், மானிட இரட்சண்யத்தைப்பற்றிய கடவுளது திட்டங்களில ஒத்துழைப்பதும் என அவள் அறிவாள்.

கடவுள் பூமியில் நமக்குக் கொடுத்திருக்கும் வேலையை இவ்விதம் நாம் நிறைவேற்றுகிறோமா? நம்மையும் பிறரையும் அர்ச்சிக்க நாம் உழைக்கிறோமா?

தேவதாய் மேல் நமக்குள்ள பக்தியைப் புதுப்பித்து, அவளுக்கு உகந்த பிள்ளையாய் வாழ நாம் உறுதி செய்வோமாக.

மரியாயைப் பூமிக்கு தந்து,அவளை நம் அன்னையாகவும் நமக்காகப் பரிந்து பேசுகிறவளாகவும், நம் மத்தியஸ்தியாகவும், நம் இரட்சகியாகவும் நியமித்ததற்காக கடவுளுக்கு நாம் நன்றி செலுத்துவோமாக.

# ஜெபமாலை மாதா திருநாள்

*(அக்டோபர் – 7)*

பரிசுத்த கன்னிமரி மீது மிக அன்பு கொண்டிருக்கும் இஸ்பிரீத்து சாந்துவை ஆராதிப்போம். பரிசுத்த கன்னி மகிமைப்படுத்தப்பட வேண்டும் என்பது அவரது விருப்பம். அதனாலேயே ஜெபமாலைப் பக்தியை விசுவாசிகளின் உள்ளங்களில் அவர் ஊன்றியிருக்கிறார். எங்கும் எக்காலத் திலும் மக்கள் திருச்செபமாலையை நேசித்து வந்திருக்கிறார்கள். மாமரியை மகிமைப்படுத்தும் இந்தப்பக்தி முயற்சிக் காக திவ்விய இஸ்பிரீத்துசாந்துவுக்கு நாம் நன்றி செலுத்துவோம்.

**ஜெபமாலையின் உயர்வு:**

*1)* ஜெபமாலையின் ஜெபங்கள் உயர்ந்தவை. கர்த்தர் கற்பித்த மன்றாட்டும் மங்களவார்த்தை மன்றாட்டும் ஜெபமாலையில் முக்கியமானவை. இவை தம்மிலே மிக உயர்ந்தவை, பரிசுத்தமானவை, சேசுவுக்கும் கன்னிமரிக்கும் பிரியமானவை.

*2)* திருச்சபையானது ஜெபமாலை ஜெபிப்பவர்களுக்கு ஏராளமான பலன்களையளித்து இந்த வழக்கத்தை ஊக்கு வித்துப் பரப்பி வருகிறது. பல புதுமைகளால் கடவுள் இந்தப் பக்திமுயற்சியை அங்கீகரித்திருக்கிறார்.

*3)* அர்ச்சியசிஷ்டவர்கள் பலர் ஒவ்வொரு நாளும் ஜெப மாலை ஜெபித்து ஏராளமான அபூர்வ வரப்பிரசாதங்களைப் பெற்றதுடன் பிறருக்கும் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

*4)* ஜெபமாலையானது நம்மைப் பரிசுத்த கன்னிமரி யுடன் ஒன்றிக்கிறது. “மரியாயே, வாழ்க, என்று கூறி, நம் அன்னையை வாழ்த்துவது எத்தனை நியாயமானது, எவ்வளவு இனிமையானது. “அருள் நிறைந்த மரியாயே, வாழ்க; கர்த்தர் உம்முடனே; பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே; உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசுவும் ஆசீர்வதிக்கப் பட்டவரே” என்று நாம் சொல்லும் பொழுது அவர்களது பேறுபலன்களையும் மகத்துவத்தையும் நாம் வாழ்த்தி, அவர்களை சிருஷ்டிகள் அனைத்திற்கும் மேலாக உயர்த்துகிறோம். அவர்கள் கடவுளுடைய தாய்; எனவே தமது மன்றாட்டால் அவர்கள் சர்வவல்லமையுள்ளவர்கள். அவர்களை நாம் உதவிக்கு கூப்பிடுகிறோம்; நம் ஆத்துமங்களை இரட்சிக்கும் வேலையில் நமக்கு உதவி செய்ய அவர்களை அழைக்கிறோம். அவர்கள் மானிடராகிய நம் தாய். தாய்க்குரிய அன்பும் ஆதரவும் அவர்களிடம் உண்டு; எனவே நம் வாழ்விலும், முக்கியமான நேரமான நமது மரண நேரத்திலும் அவர்கள் தமது சர்வவல்லபத்தைப் பயன்படுத்தி நம்மைப் பாதுகாக்க அவர்கள் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள். நாம் சாகும் நேரத்தில் இருக்கும் நிலையைப் பொறுத்திருக்கிறது நமது மறுவுலக வாழ்வு. அதனாலேயே, “அர்ச்சியசிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்” என்கிறோம். இத்தகைய அழகிய மன்றாட்டின் உயர்வை உணராமல் வாடிக்கைக்காகச் சொல்கிறவர்களுக்கு இது உப்புச் சப்பற்றிருக்கலாம்; ஆனால் அதன் பொருளைக் கண்டுபிடித்து, முழு இருதய ஆர்வத்துடன் சொல்லுகிறவர்களுக்கு அது பொருள் நிறைந்ததாகிறது, அழகுடன் காணப்படுகிறது. ஜெபமாலையின் ஜெபங்களைப் பற்றி இதுவரை இவ்விதம் நினைத்திருக்கிறோமா? பராக்குடனும் கவனமின்றியும் சொன்னமையால் ஜெபமாலை நமக்கு சலிப்பைத் தந்திருக்கிறதா? நாமும் ஜெபமாலையை ஜெபித்து பிறரும் அதைச் சொல்லச் செய்திருக்கிறோமா? பரிசுத்த கன்னிமரியின் மீது நமக்குள்ள அன்பையும் பிரமாணிக் கத்தையும் காட்டும் வண்ணம் ஜெபமாலை எப்பொழுதும் நம்முடன் கொண்டு சென்றிருக்கிறோமா? நமது வேலை

எத்தன்மையதாயிருந்தாலும் அதைத் தவறாமல் நாள்தோறும் சொல்லி வந்திருக்கிறோமா?

## ஜெபமாலை ஜெபிக்கும் விதம்:

இதை நன்கு ஜெபித்து பயன் பெற, பல காரியங்களை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

1) ஜெபங்களின் பொருளை உணர்ந்து சொல்லுதல். நேரம் கிடைக்கும்போது அந்த ஜெபங்களை நிறுத்திச் சொல்லிச் சிந்தித்துப் பார்த்தல் மிகப் பயனுள்ளது.

2) ஒவ்வொரு பத்துமணி ஜெபத்தைத் தொடங்கு முன்னும் ஒரு விசேஷ நோக்கத்தை நாம் நினைத்துக் கொள்ளலாம். இதனால் சலிப்பு தவிர்க்கப்படும், ஆர்வம் ஏற்படும். நாம் அத்தியாவசியம் தவிர்க்கவேண்டிய நமது பிரதான குற்றத்தை விலக்க, முதல் பத்துமணி ஜெபத்தின்போது மாதாவின் மன்றாட்டின் உதவியைக் கோரலாம். நாம் அநுசரிக்க வேண்டிய ஒரு புண்ணியத்தை அடைய இன்னொரு பத்து மணியின்போது அன்னையைப் பிரார்த்திக்கலாம். நாம் ஆசிக்கும் ஒரு வரத்தைக் கேட்டு, மூன்றாவது பத்து மணியை ஒப்புக்கொடுக்கலாம். பாவிகள் மனந்திரும்பவோ, குறிப்பிட்ட ஒரு பாவிக்காகவோ, அல்லது சாகும் தறுவாயிலிருக்கும் பாவிகள் மனந்திரும்பவோ நான்காவது பத்துமணியை அன்னையின் முன் சமர்ப்பிக்கலாம். உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படுவோருக்காக, நமது குற்றத்தால் அங்கு உபாதைப்படுவோருக்காக, எல்லோராலும் மறக்கப்பட்டு அங்கு வேதனைப்படுகிறவர்களுக்காக, ஐந்தாவது பத்துமணி மன்றாட்டைச் சமர்ப்பிக்கலாம்.

3) ஜெபமாலையின் தேவ இரகசியங்களைப்பற்றிச் சிந்தித்தல் முக்கியமானது. ஜெபமாலையின் 15 தேவ இரகசியங்களிலும் சேசுவின் வாழ்க்கை வரலாறும், மரியன்னையின் வாழ்க்கை வரலாறும் சுருக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன. இவை தரப்பட்டிருப்பதின் நோக்கம் இவற்றைப்பற்றி நாம் சிந்தித்து, சேசு மரியன்னை இவர்களைப் போல், நாம் வாழ முயல்வதற்காகவே. எனவே தேவ இரகசியத்தைச் சொன்னதும், இந்தத் தேவ இரகசியம் குறிக்கும் சம்பவத்தில் சேசு என்ன செய்கிறார்? அல்லது மாதா எவ்விதம் நடந்துகொள்கிறார்கள்? எனக் கேட்டு அவர்களைப்போல் வாழும் வரத்தைக் கேட்கவேண்டும். உதாரணமாக, தாழ்ச்சி, அயலாரை நம்மைப்போல் நேசித்தல், பொறுமை, உடலிலும் உள்ளத்திலும் தூய்மை, கீழ்ப்படிதல், தேவசித்தத்திற்குப் பணிந்திருத்தல், உள்ளத்தையும் உடலையும் அடக்குதல், நிந்தை அவமானம், தாழ்மைகளில் திடமனது, வாழ்வின் சிலுவைகளை சேசுவுடன் சேர்ந்து சுமத்தல், தீமை செய்கிறவர்களுக்கு நன்மை செய்தல், பாவத்துக்கு மரித்து சேசுவில் விசுவாசத்துடன் புதுவாழ்வு வாழ்தல், கிறீஸ்துவ நம்பிக்கை, நம் தலைவர்களுக்கு இஸ்பிரீத்துவின் ஞான ஒளி, கிறீஸ்துநாதருடன் ஒன்றிக்க ஆவல், மரியாயின் மாசற்ற இருதயத்துடன் ஒன்றித்து அனைத்தையும் செய்தல் முதலிய வரங்களைக் கேட்டு மன்றாடலாம்.

4) பிதாவாகிய சர்வேசுரன் தம் குமாரத்திக்கு முடி சூட்டுவதை நாம் பார்ப்பதாக ஒருநாள் ரூபிகரித்து அருள்நிறை மந்திரத்தைச் சொல்லலாம். தேவ சுதன் தம் திருத்தாயாருக்கு



வரவேற்பளிப்பதாக, இன்னொரு நாள் ரூபிகரிக்கலாம். திவ்விய இஸ்பிரீத்துசாந்து தம் நேச பத்தினியை சிம்மாசனத்தில் அமரச்செய்வதைக் காண்பதாக இன்னொரு நாள் நாம் ரூபிகரிக்கலாம். பரலோக அரசியாக அல்லது உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படுவோரின் ஓயாத் தஞ்சமும் ஆதரவுமாக அல்லது யுத்த திருச்சபையின் ஆண்டவளாக அன்னையை ரூபிகரித்து அவளை நோக்கிப் பிரார்த்திக்கலாம். ஜெபமாலையைப் பக்தியுடன் ஜெபிக்க இந்த வழிகள் நமக்கு மிக உதவியாயிருக்கும். இவற்றை நாம் பயன்படுத்த முயன்றுவருவோமாக.



# நற்கருணையின் பாப்பரசர்

**- அர்ச் பத்தாம் பத்திநாதரின் ஜீவிய சரிதை**

திரு. ஆர்.பி. குழந்தைசாமி, தூத்துக்குடி, 1956

### பதுவா குருமடத்தில் படிப்பு, குருப்பட்டம்

என்னைப் பலப்படுத்தின நம்முடைய ஆண்டவராகிய சேசு கிறீஸ்துநாதர் என்னை உண்மையுள்ளவனென்று எண்ணி இந்த ஊழியத்தில் வைத்தபடியினுலே அவருக்கு நன்றியறிந்திருக்கிறேன்.

பதுவா நகரம் பல அற்புதங்களைச் செய்பவரான அர்ச். அந்தோணியாரால் உலகமெங்கும் பிரசித்திபெற்றது அல்லவா? அந்நகரத்தில் அர்ச். அந்தோணியார் கோவிலும், அக்கோவிலிலிருந்த விலைமதிக்கப்படாத விசித்திர வேலைப் பாடுகளும், படங்களும், சுரூபங்களும் ஆகிய எல்லாம் பெப்பியின் மனதைக் கவர்ந்து மகிழ்வுறச் செய்தன. சட்ட நிபுணரும் வைத்திய சாஸ்திரிகளும், கவிஞரும், தத்துவ ஞானிகளும் விளங்கிய பெரியதோர் சர்வ கலாசாலையும் அந்நகரில் உண்டு. பெப்பி போய்ச் சேர்ந்த குருமடமோ 1577-ம் ஆண்டில் கட்டப்பட்டது. இதில் ஓர் அழகிய கோவிலும், பெரிய புத்தகசாலையும் உள்ளது. குருமடத்தின் பெரிய புத்தகசாலையைக் கண்ட வாலிபன் பெப்பியின் மனம் பூரித்தது. குருமடத்தில் படிப்பவர் எவரும் அப்புத்தகசாலையில் தாராளமாய்ப் போய் தங்கள் இஷ்டப்படி புத்தகங்கள் எடுத்து வாசிக்கக்கூடிய வசதியிருந்தமையால் பெப்பிக்கு உண்டான சந்தோஷம் கொஞ்சமல்ல.

குருமடத்தில் சேர்ந்ததுமுதல் பெப்பி மடத்திலுள்ள தனது குருமாணவ - சகோதரருக்கு சகலத்திலும் நன்மாதிரிகை ஆக இருந்தார். அவரது அடக்கமும், மரியாதையும், மலர்ந்த முகமும், இனிய பேச்சும், அவரை யாவர்க்கும் அருமையானவராகச் செய்தன. விடாமுயற்சியுடையவர், வீண்காலம் போக்காதவர், திடபுத்தியுள்ளவர், அமைதியும் கீழ்ப்படிதலும் நன்கமைந்த சற்குணர் என்று பெப்பியுடைய ஆசிரியரில் ஒருவர் குறிப்பு எழுதி வைத்திருக்கிறார். வகுப்பிலோ, விளையாட்டு நேரத்திலோ, மடத்துத் தோட்டத்தில் வேலைசெய்யும் போதோ எந்த விஷயத்திலும் தனக்கு மேலாக குறிக்கப்பட்ட சகோதரரை கடவுள் ஸ்தானத்திலிருக்கும் அதிகாரியாக எண்ணி அவருக்கு வணக்கமும் கீழ்ப்படிதலும் மனம் கோணாமல் செலுத்துவது பெப்பியின் வழக்கம். ஆள விரும்புவோன் அடங்கியிருக்க முதலில் கற்கணும் என்று பிற்காலத்தில் பத்தாம் பத்திநாதர் தம்மைச் சூழ்ந்துள்ளவர்க்கு சொல்வதுண்டு.

குருமடத்தில் சேர்ந்த முதல் வருடக் கடைசியில் நடந்த பரிட்சையில் பெப்பி எல்லாப் பாடங்களிலும் முதன்மையாய் இருந்தாரென்று சொன்னால் ஆச்சரியத்துக்கொன்றுமிடம் இல்லை. பரீட்சை முடிந்து விடுமுறைகாலம் துவங்கியவுடன் ரியேஸ் கிராமத்துக்கு பெப்பியை அழைத்துவர அவர் தாயார் ஓர் வண்டி திட்டஞ்செய்தனுப்பினாள். அவ்வண்டியில் பெப்பியின் சகோதரி தெரேசாளும் வந்திருந்தாள். இதைக் கண்ட பெப்பி தனது மூட்டைகளை மாத்திரம் வண்டியில் வைத்து, தனது தங்கையைப் பார்த்து, தெரேசா, நான் வண்டியில் பிரயாணம் செய்யாமல் கால் நடையாய் வந்தால் பதுவாப் பட்டணத்தின் காட்சிகளை சாவகாசமாய்க் காணலாம். இப்பட்டணத்தைத் தாண்டியபின் நான் உன்னுடன் வண்டியில் ஏறிக்கொள்ளுகிறேன் என்று சொல்லி, வண்டிக்குச் சற்று பின்னால் நடந்து சென்றார்.

கடைசியாய்ப் பதுவா பட்டணத்தைக் கடந்து தமது கிராமத்துக்குப் போகும் பாதையை அடைந்தவுடன் தம் சகோதரியுடன் வண்டியிலேறி வீடுவந்து சேர்ந்தார். வீடு வந்து சேர்ந்தபின் தமது அன்னையிடம், "அம்மா நீங்கள் என்னை அழைத்துவர வண்டி ஏற்பாடு செய்தனுப்பியதற்காக மிகவும் நன்றி கூறுகிறேன். ஆனுல் ஒரு முக்கியமான காரியத்தை நீங்கள் மறந்துபோய்விட்டீர்கள். தெரேசாளின் நெற்றியில் இவள் பெப்பியின் சகோதரியென்று பட்டயமெழுதிக் கட்டியிருக்கிறதே. குருக்களைப்பற்றியும், குருமடத்தில் படிப்பவர்களைப்பற்றியும் எவரும் எளிதில் குற்றம் கூறி விடுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா? ஒரு சிறு பெண்ணுடன், குருமடத்தில் படிக்கும் நான் வண்டியிலேறி உல்லாசமாய் சவாரி செய்துவருவதைக் காணும் பதுவா பட்டணத்தார் என்ன நினைப்பார்கள்? நமது கிராம மக்களை

போல் பட்டணத்தார் கபடற்ற மனதுள்ளவர்களென்று எண்ணி விடாதீர்கள்! இனிமேல் என்னை அழைத்துவர என் சகோதரிகளை முதலாய் அனுப்பவேண்டாம். ஜனங்களுடைய வீண் பேச்சுக்கு நாம் ஏன் இடம்கொடுக்கவேண்டும்?"என்றார்.

வீடு வந்து சேர்ந்த பெப்பி தாய்தந்தையருடனும் தம்பி தங்கையருடனும் சில நாள் சந்தோஷமாய்க் கழித்தார். பங்கு சுவாமியாருடன் தன் பாடங்களைத் திரும்பவும் படித்து தேர்ச்சியடையவுஞ் செய்தார். விடுமுறை நாட்கள் விரைவில் கழிந்தன. இரண்டாம் வருடப்படிப்பிற்கு உற்சாகத்துடன் குருமடம் போய்ச் சேர்ந்தார் மூத்தமகன் பெப்பி.

இரண்டாம் வருடப்படிப்பும் ஆரம்பித்தது. பெப்பியும் முன்போல் உற்சாகமாய்ப் படிக்கத் துவங்கிவிட்டார். ஆனால் அவ்வருடம் மே மாதத்தில் தனது தந்தை திடீரென சுகவீனம் அடைந்தாரென்ற செய்தி வந்தது. எல்லாம் கடவுளின் திருவுளச்செயல் என்று பெப்பி தைரியமாயிருக்கையில், சில தினங்களில் தந்தை சார்த்தோ காலமானார் என்ற செய்தி அறிந்து, அளவற்ற துயரமடைந்தாலும், "ஆண்டவரே, உமது சித்தப்பிரகாரம் ஆகக்கடவது" என்று அமைதியுடன் கூறி மனம் ஆறினர். தனது அன்னையும் உடன் பிறந்தோரும் எவ்வாறு இனி தந்தையுதவியின்றி வாழ்க்கை நடத்துவார்கள்! மூத்தவனான தான் போய் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது தன் கடமையல்லவா? ஆகையால் குருத்துவப் பட்டத்துக்குப் படிப்பதை விட்டுவிட்டு ரியேஸ் கிராமத்துக்கு உடனே சென்று, தன்னாலியன்ற வேலை ஏதாகிலும் செய்து, குடும்பத்தை காப்பாற்றவேண்டியதாகுமோவென்று வெகு கவலையாய் யோசித்துக்கொண்டிருந்தார் பெப்பி.

ஆனால் அவருடைய நல்ல தாயார் மார்க்கரித்தாள் உடனே பெப்பிக்கு கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுதினாள்.

"தகப்பன் மரணத்தால் குடும்பத்துக்குப் பெரிய நஷ்டம் நேரிட்டாலும், அதை முன்னிட்டு பெப்பி குடும்பக் கவலையைத் தன்மேல் போட்டுக்கொண்டு, குருமடத்தை விட்டு வரவேண்டிய அவசியமில்லை. கொஞ்ச காலம் கஷ்டத்தை தான் பொறுமையாய் சகித்துக் கொள்ளக்கூடும். அதற்குள் மற்றப்பிள்ளைகள் குடும்பப்பாரத்தைத் தாங்கத்தக்க வயதுள்ளவர்களாகிவிடுவார்கள். ஆகையால் பெப்பி மடத்தில் தங்கி, முன்போலவே படித்துத் துவக்கிய காரியத்தை முடித்து, குருப்பட்டம் பெறுவதே குடும்பத்தின் பாக்கியம். அழிவில்லா ஆஸ்தி, அனைவருக்கும் ஆண்டவரின் அருளளிக்கும் அந்தஸ்து. ஆகவே, பெப்பி நீ எங்களைப் பற்றிக் கவலைக்கொள்ள வேண்டாம் என்று ஆறுதலான வார்த்தைகளால் தைரியமாக தனது எண்ணத்தைத் தெரிவித்தாள்.



**அர்ச். பத்தாம் பத்திநாதர் பயின்ற பதுவா குருமடம்**

பெப்பியின் கவலை தீர்ந்தது. முன்னிலும் உற்சாகமாகப் படிக்கத் துவங்கினார். பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடுமல்லவா? தந்தை மரித்த துயர் முற்றிலும் நீங்குமுன் ரியேஸ் பங்குசுவாமியார் அவ்வூரினின்று மாற்றப்பட்டார். பெப்பிக்குத் தந்தையைப் போன்று அன்பு செலுத்திய குருவானவர் இவர். இவரது முயற்சியால்தான் பெப்பி பதுவா குருமடத்துக்கு வந்து சேர்ந்தார். சார்த்தோ குடும்பத்துக்கு உற்ற சிநேகிதர். தந்தையிழந்த பிள்ளைகளுக்கு வெகு ஆறுதலும் ஆதரவுமாயிருந்தவர் வயதான காலத்தில் பங்கு விசாரணை வேலை கடினமாயிருந்தபடியால், அதினின்று நீங்கி வேறோர் கிராமத்துக்குச் சென்றார். பெப்பிக்கும் அவர் வீட்டாருக்கும் இதுவும் ஓர் சோதனையாயிருந்தது. ஆனால் புதிதாய் வந்த சங். இராயப்பர் சுவாமியார் பழையவரைப் போலவே பெப்பி மட்டில் கரிசனமுள்ளவராயிருந்தார். விடுமுறை நாட்களில் பெப்பி வீட்டுக்குப் போகும்போது இவர் பெப்பியைத் தனது பிரிய குமாரனைப்போல் பாராட்டி, பெப்பிக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்து, படிப்பில் மிக உற்சாகமூட்டி, குருவானவர் அந்தஸ்தின் கடமைகள் எத்தனை கனமானவையென்றும், அவைகளைச் சரிவர நடத்தினா லொழிய தேவ அழைப்பின் பலன் கிடைக்காதென்றும் புத்தி புகட்டுவார். அடிக்கடி பெப்பிக்குக் கடிதம் எழுதி சகல விதத்திலும் பெப்பி விஷயத்தில் அதிக கவலையெடுத்துக் கொண்டார். இந்த இராயப்பர் சுவாமியாருடைய உற்சாகத்தினால் பெப்பி சங்கீத ஞானத்திலும் விருத்தியடையத் துவங்கினார். இது பிற்காலத்தில் பத்தாம் பத்திநாதருக்கு எவ்வளவு உதவியாயிருந்ததென்று பிறகு காண்போம். சங். இராயப்பர் சுவாமியும் ரியேஸ் பங்கிலிருந்து ஒரு வருடத்திற்குள் மாற்றப்பட்டார். அக்கிராமவாசிகள் யாவர்க்கும் அவரை மாற்றியது வருத்தமான காரியமென்றால் பெப்பிக்குப் பன்மடங்கு வருத்தமாயிருந்திருக்கவேண்டும் என்று சொல்லவேண்டியதில்லை.

*1853*-ம் வருடம் விடுமுறை நாட்களைக் கழிக்க பெப்பி தமது வீட்டுக்கு வந்தபோது கிராமக் கோவிலில் முன்பு இருந்த ஒழுங்குகள் மாறி, விபரீத ஏற்பாடுகள் நூதனமாய் உண்டாகி விசுவாசிகள் மனம் வருந்தியிருப்பதைக் கண்டார். சங். இராயப்பர் சுவாமிக்குப் பதில் புதிய பங்கு சுவாமியாராய் நியமிக்கப்பட்டவர் சற்று முன்கோபி. மேலும் உடல் ஆரோக்கியமற்றவராகையால் தமக்கு முன்பிருந்த இரண்டு பங்கு சுவாமிமார்களைப் போல் உற்சாகமாய் உழைக்க இயலாதவர். ஆகையால் ரியேஸ் கிராமவாசிகள் இது குறித்து முறையிடத் துவங்கினர். உதவி பங்கு சுவாமியாரும் முறுமுறுக்கத் தொடங்கினார்.

இவர்கள் முறைப்பாட்டிற்கு முற்றிலும் காரணமுண்டு என்று பெப்பி கண்டதும், பங்கு சுவாமியாருடைய

காரியங்களைப்பற்றித் தாம் ஒன்றும் தவறாய்ப் பேசாமல் வெகு விவேகமாய் நடந்துகொண்டார். சங். இராயப்பர் சுவாமியாருக்கு அவர் எழுதிய கடிதத்தில்:

“இவ்வருடம் எனது விடுமுறை நாட்களை ரியேசில் வெகு கஷ்டமாய்ச் செலவழித்தேன். ஏறக்குறைய எந்நேரமும் வீட்டிலேயே தம்பி தங்கையருடன் தங்கியிருந்தேன். ஏனென்முல், வெளியே எங்கு சென்றாலும் பங்கு குருவைப் பற்றிய குறைகளை என் காதில் விழும். அறிமுகமானவர்கள் என்னிடம் வந்து முறையிடவும் துவக்கினார்கள். எப்போது விடுமுறை காலம் முடிந்து குருமடத்துக்குத் திரும்புவேனோ என்று காத்திருக்கிறேன்” என்று கூறியிருக்கிறார்.

*1856*-ம் வருடம் முந்திய வருடங்களைவிட அதிக கவனமாய்ப் பெப்பி படித்தார். குருமடத்தின் படிப்பு இன்னும் இரண்டு வருடங்களில் முடிந்துபோகும். படிப்பில் தேர்ச்சியடையவே பெப்பி தாழ்ச்சியில் உயர்ந்தார். இக்காலத்து இளைஞரைப் போலன்றி அறிவில் முதிர முதிர அடக்கமும் அமைதியும் பொருந்திய சம்மனசாக விளங்கினுர் சார்த்தோ பெப்பி. குருமடத்தில் படித்துக்கொண்டு இருந்தவர்களுள் ஓர் அரிய ஆபரணமாகத் துலங்கினுர். யாவரிடத்திலும் அன்பும் தயையும் காட்டினுலும், ஒழுங்கும் நீதியும் தவருத சற்குணராகையால் வகுப்பறையில் சட்டாம் பிள்ளையாக சார்த்தோவை சிரேஷ்டர் நியமித்தார். எப்போதும் பெப்பி மலர்ந்த முகமுடையவராயிருந்தபடியால் ஆனந்தக்களிப்பு என்று அனைவரும் அவரை அழைப்பதுண்டு. மற்றவர்களுடன் தக்க சமயங்களில் சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காக மகா உல்லாசமாய்ப் பேசி அன்புடன் அளவளாவியிருப்பினும், அவசரமின்றி அங்குமிங்கும் திரியாமல் தனது அறையில் தங்கியிருப்பதே அவருக்குப் பிரியமாயிருந்தது. வேதாகமங்களை வாசிப்பதும், திருச்சபையின் சரித்திர விசேஷங்களை ஆராய்ந்து படிப்பதும், அர்ச். அக்குவினாஸ் தோமையாருடைய சாஸ்திரப் புத்தகங்களை சந்தேகம் தீரக் கற்பதுமே அவருக்குப் பேரானந்தமாயிருந்தது.. பிற்காலத்தில் அவர் எழுதிய நிருபங்களால் அவர் வேதாகமப் படிப்பிலும், சரித்திர ஞானத்திலும் எத்துணை நிபுணராயிருந்தரென தெளிவுற நாம் அறிந்துகொள்ளலாம். ரியேஸ் கிராமப் பங்குசுவாமியாரிடம் கற்றுக்கொண்ட சங்கீத சாஸ்திரத்தைக் கைவிடாமல் அப்பியாசஞ் செய்துவந்தமையால் அதிலும் வல்லவராகி குருமடத்தின் பாடகர் குழுவின் தலைவராக நியமிக்கப் பட்டார்.

*1856*-ம் வருடம் பெப்ருவரி மாதம் *27*-ம் தேதி தெரெவிசோ மேற்றிராசனக் கோவிலில் உபதியாக்கோன் பட்டம் பெற்றார். அவ்வருடம் ஜூன் மாதம் சேசுவின் திரு இருதய திருநாளன்று தமது சொந்தக் கிராமத்துக் கோவிலில் பிரசங்கம் செய்யும்படியாக அனுப்பப்பட்டார். அப்போது அவர் செய்த சிறு பிரசங்கம் வெகு இனிமையும் மனக்கனிவும் நிறைந்ததென்று யாவரும் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். சாதாரணமாக பெப்பி சார்த்தோவின் பிரசங்கங்கள் வெகு சுருக்கமும் பக்தி உருக்கமும் நிரம்பப் பெற்றவை. ***நீண்ட பிரசங்கங்களும் பெரிய ஜெபப் புத்தகங்களுமே கிறீஸ்தவர்களுடைய பக்தியைக் குறைக்க ஏதுவான இரண்டு சாதனங்களென்று*** பெப்பி அநேகந் தடவை சொல்லியிருக்கிறார்.

*1858*-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் குருமடத்தின் படிப்புகள் முடிந்தன. ஆரம்ப வருடத்தைப் போலவே முடிக்கும் ஆண்டிலும் பெப்பி சார்த்தோ சகல பாடங்களிலும் முதன்மையாக தேர்ச்சிபெற்றார். அவருக்கு இப்போது வயது இருபத்து மூன்று. திருச்சபையொழுங்கின்படி இருபத்து நான்கு வயதான பிறகுதான் குருப்பட்டம் கொடுக்கலாம். ஆகையால் சாதாரண முறையினின்று நீங்கி இருபத்து மூன்றாவது வயதிலேயே சார்த்தோ பெப்பிக்குக் குருப்பட்டம் கொடுக்கவேண்டுமென்ற ஓர் விசேஷ மனு அனுப்பப்பட்டது. அம்மனுவுக்கு அனுகூலமான விடை உரோமையினின்று செப்டம்பர் மாதம் கிடைத்தது. தெரெவிசோ மேற்றிராணியார் அப்போது காசல்ப்ராங்கோ என்னும் ஊரிலிருந்தார். அவ்வூரில் *1858*-ம் வருடம் செப்டம்பர் மாதம் *14*-ம் தேதி சூசை மெல்கியோர் சார்த்தோ குருப்பட்டம் பெற்றார். ரியேஸ் கிராமத்திலிருந்து காசல்ப்ராங்கோ பள்ளிக்கூடத்துக்கு வெறுங்காலாய் நடந்துபோய்க் கஷ்டப்பட்டு படித்த அஞ்சல் அலுவலகத் தலைவர் மகன் இப்போது சாஸ்திரங்களை சந்தேகமறக் கற்று திவ்விய சேசுவின் குருவாய் விளங்கும் பாக்கியம் கத்தோலிக்க திருச்சபையொன்றிலே மாத்திரம் காணலாம்.

குருப்பட்டம் பெறும் நாள் நெருங்க நெருங்க சூசை சார்த்தோ அவ்வரிய பெரிய நாளின் மகிமையையும் தமக்கு கிடைக்கப்போகும் பேரதிர்ஷ்டத்தையும் நினைத்து மனமகிழ்ந்து, கடவுளுக்கு ஸ்தோத்திரம் புரிந்தார். குருப்பட்டம் பெற்ற அடுத்த நாள் செப்டம்பர் மாதம் *15*-ம் தேதி அர்ச். வியாகுலமாதாவின் திருவிழாவன்று சொந்தக் கிராமமாகிய ரியேஸ் பங்குக் கோவிலில் சங். சூசை சார்த்தோ சுவாமியார் தமது முதல் திவ்விய பலிபூசையை நிறைவேற்றப் போகிறாரென்று கேள்விப்பட்டு அக்கிராமம் முழுவதுமே குதூகலித்துக்கொண்டாடினார்களென்றால் சார்த்தோவின் வீட்டாருடைய சந்தோஷத்துக்கும் அளவுண்டோ! கிராம மக்களனைவரும் திரண்டு வந்து சங். சூசை சார்த்தோவின் முதல் திவ்விய பலிபூசையைக் கண்டார்கள். மூவுலகுமாளும் முழு முதற் கடவுளின் சரீரத்தை முதல் தடவையாக ஏந்தின அவர் கரங்களை முத்தமிட்டனர். சிறு குருவின் கரங்களில் இருந்து அநேகர் திவ்விய நற்கருணையருந்தினர். சங். சூசை சார்த்தோ தமது முதல் பூசை செய்த தினம் ரியேஸ் கிராமத்தில் ஓர் விழாவாகக் கொண்டாடப்பட்டதென்முல் மிகையாகாது.

குருப்பட்டம் பெற்ற சில தினங்களில் சங். சூசை சார்த்தோவை தொம்போலோ பட்டணத்தின் பங்கு சுவாமியாருக்கு உதவியாக அவருடைய மேற்றிராணியார் நியமித்தார். சங். சார்த்தோவும் தமது புது வேலையில் உற்சாகமாய்ப் போய்ச் சேர்ந்தார்.

# தீர்த்தம்

**அருட்கருவிகள் II**
நன்றி: கத்தோலிக்கக் களஞ்சியம், திருச்சி, 1941

எப்பொருளையும் சுத்தஞ் செய்வதற்கு இயற்கையில் ஏற்பட்டது தண்ணீரே. இதனிமித்தமே அது உட்சுத்தத்துக்கு அடையாளமென்று சகல மதத்தினராலும் கருதப்படுவது ஆச்சரியமன்று. கிரேக்கரும் உரோமானரும் தங்கள் வேத சடங்குகளில் தண்ணீர் தெளிப்பதை ஓர் முக்கிய அம்சமாக அனுசரித்துவந்தார்கள். சுற்றுப்பிரகாரங்களின் போது, அதைக் கொண்டுதான் பட்டணங்களைச் சுத்திகரித்தார்கள். வயல்களில் பயிரிடுவதற்கு முன், அவைகளைத் தீர்த்தத்தால் தெளிப்பது வழக்கமாயிருந்தது. படைவீரர் யுத்தகளத்துக்குச் செல்லுமுன், தேவர்களின் ஆதரவை அடையும்படி தீர்த்தத்தால் தெளிக்கப் பெற்றார்கள். எஜிப்தியர்களுக்குள் தீர்த்த உபயோகம் வெகு சாதாரணமாயிருந்தது. அவர்களுடைய குருக்கள் ஒவ்வொரு பகலும் இரவும் இருமுறை அதில் ஸ்நானம் செய்ய வேண்டியிருந்தது. நமது நாட்டிலும் இவ்வழக்கம் பிறமதத்தினருள் இருந்து வருவதை அறிவோம். யூதருடைய பலிபொருட்களும் திருப்பாத்திரங்களும் பிரஜைகளுமே தீர்த்தம் தெளிக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றிய சட்ட திட்டங்கள் யாத்திராகமத்திலும், லேவியர் ஆகமத்திலும் காணக்கிடக்கின்றன.



**அர்ச். இராயப்பர் பேராலயத்திலுள்ள தீர்த்தத் தொட்டி**

பழைய ஆகமங்களினின்றே, திருச்சபையில் இப்போது வழங்கி வருகிற தீர்த்தத்தைப் பற்றிய சடங்கு முறைகளில் அநேக அம்சங்கள் தெரிந்து கொள்ளப்பட்டன என்பதற்குச் சந்தேகமில்லை. திருச்சபையில் தீர்த்தத்தின் உபயோகம் அப்போஸ்தலர் காலந்தொட்டே வழங்கி வருகிறது என்று சொல்லக் காரணமுண்டு. யூதர்களுடைய அநுஷ்டானத்தில் ஏற்கனவே இருந்த இந்தச் சடங்கை, அவர்கள் மனந்திரும்புவதற்கு ஓர் தூண்டுதலாக, அர்ச். மத்தேயு, கிறீஸ்தவர்களுக்குள் ஏற்படுத்தினார் என்று சிலர் நினைக்கிறார்கள். முதலாவது அலெக்சாந்தர் என்னும் பாப்பானவர் 117-ம் வருடத்தில் எழுதின ஒரு நிருபத்தில் தீர்த்தப் பிரயோகத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறதுமல்லாமல், 4-வது நூற்றாண்டில் திருச்சபை உபயோகித்த ஆசாரமுறைப் புத்தகத்தில் இதைப்பற்றி விரிவாய் எழுதியிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில், பெரிய பூசை ஆரம்பிக்கு முன், ஜனங்கள் பேரில் தீர்த்தந்தெளிக்கும் வழக்கம், 4-ம் சிங்கராயர் என்னும் பாப்பானவர் காலத்திலிருந்து (9-ம் நூற்றாண்டு) நடந்துவருகிறது. கோவிலில் கதவண்டை தீர்த்தத்தொட்டி அமைக்கிற வழக்கம் வெகு பூர்வீகமானது. இரண்டாவது நூற்றாண்டிலேயே இது ஏற்பட்டதாகச் சிலர் கருதுகிறார்கள். மத்திய நூற்றாண்டுகளில் விசுவாசிகள் கோவிலில் பிரவேசிக்கையில் மாத்திரம் தீர்த்தத்தைத் தொட்டு சிலுவை வரைந்துகொள்வார்கள். கோவிலைவிட்டு வெளியே போகையில் அவ்விதம் செய்ததில்லை. சர்வேசுரனுடைய வீட்டில் பிரவேசிக்கு முன் சுத்திகரஞ்செய்வது அவசியமேயல்லாது, அதற்குப்பின் அவசியமில்லை என்கிற எண்ணம் இந்த வழக்கத்துக்குக் காரணமாகும். ஆனல், இக்காலத்தில் கோவிலில் பிரவேசிக்கும்போதும் வெளியே போகும்போதும் இரு தடவைகளிலும் தீர்த்தம் உபயோகிக்கிறோம். திருச்சபை இதற்குப் பலனைக் கட்டளையிட்டிருப்பதினால், இவ்விதம் செய்வதே நல்லது.

**நான்கு வகை தீர்த்தம்:**

***1. ஞானஸ்நான தீர்த்தம்:*** இது ஞானஸ்நானம் கொடுப்பதற்கு மாத்திரம் உபயோகிப்பது. பெரிய சனிக் கிழமையிலும் இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்கு முந்தின தினத்திலும் இதை மந்திரிக்கிறார்கள்.

***2. அபிஷேகத் தீர்த்தம்:*** கோவில் அபிஷேகத்துக்கு மேற்றிராணியார் உபயோகிக்கிற தீர்த்தம்

***3. பெரிய சனிக்கிழமை தீர்த்தம்:*** இதிலிருந்துதான் ஞானஸ்நான தீர்த்தம் மந்திரிக்கப்படுகிறது.

***4. சாதாரண தீர்த்தம்:*** இது அவசியமுள்ளபோதெல்லாம் மந்திரித்துக் கொள்ளலாம். வீடுகளிலும் கோவில்களிலும் விசுவாசிகளுடைய உபயோகத்துக்காக வைத்திருப்பது இதுவே. ஆகையால் இதையே "தீர்த்தம்" என்று சொல்வது வழக்கம். இதைப்பற்றி விசுவாசிகள் அறிந்திருப்பது அவசியம்.

**தீர்த்தம் மந்திரித்தல்:**

தீர்த்தம் மந்திரிக்கையில் குருவானவர் சொல்லுகிற ஜெபங்களில் முக்கியமானவை, உப்பின்பேரிலும் தண்ணீர் பேரிலும் சொல்லுகிற பசாசை ஓட்டும் ஜெபங்களேயாகும். நமது ஆதித்தாய் தகப்பன் சர்வேசுரனுடைய கற்பனையை மீறுவதற்குப் பசாசு காரணமாயிருந்ததுமன்றி, மனிதனுடைய உபயோகத்துக்காக ஏற்பட்ட தாபர வஸ்துக்களின்மீதும் அது வல்லமை அடைந்ததாகத் திருச்சபையின் பிதாக்கள் கருதுகிறார்கள். இந்த கணிப்பைப் பின்பற்றி, தேவ ஊழியத்துக்காக யாதாமொரு தாபர பொருளை அர்ச்சிக்க வேண்டியபொழுது, துஷ்ட அரூபியின் வல்லமை அதைவிட்டு நீங்கும்படியாகப் பசாசை ஓட்டும் ஜெபத்தை அதன்பேரில் சொல்ல வேண்டுமென்று திருச்சபை கற்பித்திருக்கிறது.

தீர்த்தம் மந்திரிக்கிற சடங்கில் உள்ள ஜெபங்கள் வெகு நேர்த்தியானவை. அவைகள், தீர்த்தப் பிரயோகத்தைக் குறிக்குங் காரணங்களை நன்றாய் விளக்கிக் காட்டுகின்றன. உப்பின்பேரில் சொல்கிற ஜெபத்தால், "அதை உபயோகிக்கிற விசுவாசிகளுக்கு ஆத்தும சரீர சௌக்கியம் உண்டாகவேண்டு மென்றும், அது தெளிக்கப்படுகிற இடத்திலிருந்து பசாசு அகன்றுபோக வேண்டுமென்றும், அது யார் யாரைத் தொடுமோ அவர்கள் எல்லோரும் அர்ச்சிக்கப்பட்டு, சகலவித அசுத்தத்தினின்றும் சுத்தியடைந்து, அந்தகார அரூபிகளின் வல்லமையினின்று விடுதலை அடைய வேண்டுமென்றும்" சுயஞ்சீவியரான கடவுளை மன்றாடுகிறோம். தண்ணீர்பேரில் சொல்லுகிற ஜெபங்களில், துஷ்ட அரூபிகள் அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவத்தின் வல்லமையால் இவ்வுலகத்தைவிட்டு அறவே ஒழியவும், மனுக்குலத்தின்மட்டில் அவைகளுக்கு யாதொரு அதிகாரம் இல்லாமற்போகவும் மன்றாடுகிறோம். பசாசுக்களைத் துரத்தவும் வியாதிகளைக் குணப்படுத்தவும் பயன்படும்படியாகச் சர்வேசுரன் தண்ணீரை ஆசீர்வதித்து, அது தெளிக்கப்படும் இடங்களின்றும் வியாதியும், பசாசின் வலையும் அகன்றுபோகச் செய்யும்படியும் பிரார்த்திக்கிறோம். இதன்பின்னர், குருவானவர் உப்பைத் தண்ணீரில் கலக்கிறார். இறுதியாய், சர்வேசுரன் இந்த உப்பையும் தண்ணீரையும் அர்ச்சித்து, அது எங்கெங்கே தெளிக்கப்படுமோ அங்கங்கே இருந்து சகல துஷ்ட அரூபிகளும் ஓடிப்போக திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் அவ்விடங்களில் வாசஞ்செய்ய வேண்டுமென்று மன்றாடுகிற ஜெபத்தைச் சொல்கிறார்.

**உப்பை உபயோகிப்பதின் கருத்து:**

சுத்தஞ்செய்வதற்கும் நெருப்பை அணைப்பதற்கும் தண்ணீர் உபயோகப்படுவதுபோல், எந்தப் பொருளும் புழுத்துக் கெட்டுப்போகாதபடி பாதுகாப்பதற்கு உப்பு உபயோகப்படுகிறது. ஆகையால், தீர்த்தத்திலுள்ள தண்ணீர் பாவக்கறைகளை சுத்தஞ் செய்யவும், நமது ஆசாபாசங்களின் தணலை அணைப்பதற்கும் அடையாளமாயிருக்கிறது. உப்பானது, பாவத்தில் நாம் மீண்டும் தவறி விழாதபடி நம்மைப் பாதுகாப்பதற்கு அடையாளமாயிருக்கிறது. அது ஞானத்துக்கு உருவகமாகவும் இருக்கிறது. நமது திவ்விய இரட்சகர் அப்போஸ்தலரை பூமியின் உப்பு என்று அழைத்தார். ஏனெனில், சுவிசேஷ அறிவு அவர்கள் வழியாய் உலகமெங்கும் பரவ வேண்டியிருந்தது. உப்பின் உபயோகம் யூதருக்குள் வழங்கி வந்ததுமன்றி, திருச்சபையிலும் 2-வது அல்லது 3-வது நூற்றாண்டிலேயே அநுசரிக்கப்பட்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது.

**தீர்த்தப் பிரயோகம்:**

திருச்சபை எந்தப் பொருளை மந்திரிக்கும்போதும் தீர்த்தத்தை உபயோகிக்கிறது என்று சொல்லலாம். திருச்சபை ஆசாரமுறைப் புத்தகத்தில், நூற்றுக்கணக்கான இதன் பிரயோகத்தைக் காணலாம். மெய்விவாகம், அவஸ்தைபூசுதல், வியாதிக்காரருக்கு நற்கருணை கொடுத்தல், மரித்தோரை அடக்கஞ் செய்தல் ஆகிய இச்சமயங்களிலும் தீர்த்தம் உபயோகிக்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஜனங்கள்பேரில் தீர்த்தம் தெளிப்பதற்கு இருவித கருத்து உண்டு. முதலாவது, அது பாவத்தினின்று நம்மைச் சுத்திகரித்து அர்ச்சித்து ஞான-ஸ்நானத்தை நினைப்பூட்டுகிறது. இரண்டாவது, நாம் காணப்போகிற பூசை நேரத்தில் நேரிடக்கூடிய பராக்குகளை விலக்கவேண்டும் என்று அறிவித்து, அவைகளை விலக்குவதற்கு உதவியாயிருக்கிறது. தீர்த்தம் தெளிக்கும்போது, அது ஒவ்வொருவர் பேரிலும் விழ வேண்டுமென்ற அவசியமில்லை. தெளிக்கிற சமயத்தில் அங்கு கூடியிருப்பவர்கள் எல்லோரும் அதன் பலனை அடைகிறார்கள். பராக்கின்றி பக்தியுடன் பூசை காண்பதற்கு இது உதவியாயிருப்பதினால் ஞாயிற்றுக் கிழமை பூசை துவக்குமுன் தீர்த்தம் தெளிக்கிற சமயத்தில் சகலரும் கோவிலில் இருக்கப் பிரயாசைப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது.

ஒவ்வொருவரும் தனித்தனியே தீர்த்தத்தைத் தொட்டு உபயோகித்துக் கொள்ளும் ஒவ்வொரு தடவையும் நூறு நாட் பலன் அடையலாம். இந்தப் பலனை அடைவதற்கு, பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினாலே என்று சொல்லித் தீர்த்தத்தால் சிலுவை அடையாளம் வரைந்துகொள்ள வேண்டியதுமல்லாமல், தன் பாவங்களைப்பற்றி மனஸ்தாபப்படுவதும் அவசியம். கோவில் வாசலண்டையில் இருந்து சற்று நேரம் கவனித்துப் பார்ப்போமானால், அங்கு வருகிறவர்கள் போகிறவர்களில் எவ்வளவு சொற்பப்பேர் இந்த நிபந்தனைகளை அநுசரிக்கிறார்கள் என்று அறிந்துகொள்ளலாம். எத்தனையோ பேர் ஈயை விரட்டுவதுபோல் ஓர் அடையாளத்தைக் காட்டிவிட்டு போகிறார்கள். தீர்த்தத்தை உபயோகிப்பதினால் பிரயோசனம் இருக்குமென்றாலும், அதற்கு அளிக்கப்பட்ட பலனை அடைய விரும்புகிறவர்கள் மேற்கூறிய நிபந்தனைகளை அநுசரித்தாலொழிய அந்தப்பலனை அடையமாட்டார்கள் என்று அறிந்திருப்பது நல்லது.

# உரோமையின் முக்கிய பேராலயங்கள் - III






டைபர் ஆற்றின் மேற்கே வீற்றிருக்கும்
உலகின் மிகப் பெரிய பேராலயம்



பேராலயத்தின் உட்புறத்தோற்றம்



பெர்னினி என்பவரால் வடிவமைக்கப்பட்ட பிரதான பீடம்



மைக்கேலாஞ்சலோ செதுக்கிய ‘பியத்தா’ பளிங்கு சுருபம்

## அர்ச். இராயப்பர் பேராலயம்

இதுவே உலகின் மிகப் பெரிய கத்தோலிக்க பேராலயம். அர்ச். இராயப்பரின் கல்லறைக்கு மேலே எழுப்பப்பட்டுள்ளது. இப்பேராலயத்தில் பல பாப்பரசர்கள் ( 91 பேர் ) அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். பேராலயத்தில் எண்ணிலடங்காத பொக்கிஷங்கள் இருந்தாலும் அனைவரின் கவனத்தை ஈர்ப்பது பெர்னினியின் பீடமும், மைக்கேலாஞ்சலோவின் பியத்தா (Pietá) சுரூபமுமே ஆகும். இப்பேராலயத்தின் முற்றத்தில் ஒவ்வொரு புதன் கிழமையும் பாப்பரசர் ஞானோபதேச வகுப்பு நடத்துவார்.




**அர்ச். இராயப்பரின் சிம்மாசனத்தை தாங்கிக்கொண்டிருக்கும் திருச்சபையின் நான்கு பிதாக்கள்**
**(அர்ச். அகஸ்டின், அர்ச். அம்புரோஸ், அர்ச். கிறிசோஸ்தம், அர்ச். அத்தனாசியார்)**



**அர்ச். அந்திரேயார்**



**அர்ச். வெரோணிக்கம்மாள்**



**அர்ச். ஹெலனம்மாள்**

**(பேராலயத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் சில அர்ச்சியசிஷ்டவர்களின் சுரூபங்கள் )**

**Sancta Maria Publications**, 8A/3 Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai – 627 002.
Ph: **8903007345**; 0462-2586201; 2572389. email: sspxindia@gmail.com